www.tamilarangam.net



# சுவடுகள்

## அபாய அறிவிப்பு 1

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் பத்திரிகைகளான சரிநிகர், யுக்திய (சிங்களம்) ஆகியவை அச்சிடப்படும் அச்சகத்தை அரசு மூடியுள்ளது. இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் துணிச்சலுடன் உண்மைகளை எழுதிவந்த இப்பத்திரிகைகள் மீதான இந்த நெருக்கடி அரசின் 'திறந்த' கொள்கையை வெளிச்சமிடுகிறது.

## அபாய அறிவிப்பு 2

பெருந்தோட்டங்கள் அனைத்தையும் பன்னிரண்டு வலயங்களாகப் பிரித்து அவ்வலயங்களைத் தனியார்வசம் ஒப்படைக்க அரசு தீர்மானித்துள்ளது. இன்னும் நான்கு மாத காலத்தினுள் அரசின் இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வரவுள்ளது.

## அபாய அறிவிப்பு 3

அடுத்த நிதி ஆண்டில் வடக்கு கிழக்கு யுத்தத்தை நடாத்த இலங்கை அரசு தனது வரவு செலவுத் திட்டத்தில் 2,500கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த இதழுக்கும் இந்த இதழுக்கும் இடையே இடைவெளி சற்று அதிகமாகவே நீண்டுவிட்டது. சற்று மனந்திறந்து உண்மையைச் சொல்லவேண்டும். பல படைப்பாளிகள் தங்கள் சோம்பேறித்தனங்களை இப்போது நடைமுறைப் படுத்துகிறார்களோ தெரியவில்லை. உறுதியளித்த பலரும் தமது படைப்புகளை உரிய காலப் பகுதியில் வழங்கியிருக்கவில்லை. இது, எமக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த காலங்களைவிடவும் இம்முறை ஆக்கங்களின் தட்டுப்பாடு சுவடுகளின் வருகையைப் பெரிதும் தாமதமாக்கியது. இந்த நிலை இனியும் தொடராதிருக்கப் படைப்பாளிகள் உதவவேண்டும் என்று வேண்டுகிறோம்.

சுவடுகள் சந்தா பற்றி பல தடவைகள் நினைவுபடுத்தியாயிற்று. ஆனால் இதுவரை பலர் தாம் செலுத்த வேண்டிய சந்தாவைச் செலுத்தாமல் உள்ளனர். இது ஒரு காத்திரமான பங்களிப்பு அல்ல. யாராவது சுவடுகளைத் தொடர்ந்து பெறுவதை விரும்பாவிட்டால் அதுபற்றி எழுத்து மூலம் அறிவிப்பதுடன், இதுவரை அனுப்பப்பட்ட பிரதிகளுக்கான பணத்தையும் அனுப்பி வைக்கவும்.


சுவடுகள் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் தயவுசெய்து புதிய சந்தாக்களைச் சேகரித்து உதவவும். உங்கள் உதவிகளையும், ஆலோசனைகளையும் எப்போதும் சுவடுகள் வரவேற்கிறது.

சுவடுகளுக்குச் சந்தா செலுத்துவோர் வங்கிக்கணக்கு மூலமாகவே பணத்தைச் செலுத்தவும். சந்தாத் தொகை பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள். வங்கிக் கணக்கிலக்கம்: 1607 52 13062

சுவடுகள் கிடையாத பகுதிகளில் உள்ளவர்கள் நேரடியாகச் சுவடுகளுடன் தொடர்பு கொள்வதன் மூலம் சுவடுகளை ஒழுங்காகப் பெற்றுக் கொள்ளலாம்.

சுவடுகளுக்குப் படைப்புகளை அனுப்புவோர் படைப்புகளின் ஒரு பிரதியைத் தம்முடன் வைத்திருக்குமாறு வேண்டப் படுகின்றனர். நடைமுறைச் சிக்கல் காரணமாக பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை.

சுவடுகளின் முகவரி:
SUVADUHAL
Herslebs Gt 43,
0578 Oslo
Norway





## உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தலைவர் பேராசிரியர் வீரப்பனுடன் நேர்முகம்



அண்மையில் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத் தலைவர் பேராசிரியர் இர.ந.வீரப்பன் ஐரோப்பிய சுற்றுப் பயணத்தின்போது நோர்வே வந்திருந்தார். அவருடன் சுவடுகள் நடத்திய செவ்வியின் முக்கிய பகுதிகள் இவை:

சுவடுகள்: உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் நோக்கம் பற்றிக் கூறமுடியுமா?

வீரப்பன்: கடந்த பத்து வருடங்களாக உலகைச் சுற்றி வருகிறேன். உலகெங்கும் பலலட்சம் தமிழர்கள் பரந்து வாழ்கிறார்கள். அவர்கள் தமிழ்ப் பண்பாட்டுடன் வாழ்வதை வலியுறுத்துவதே எமது நோக்கம். இவர்களைப் பற்றி ஆராய்ந்து நான் கட்டுரைகள் எழுதிவருகிறேன்.

சுவடுகள்: உங்களது அமைப்பு எப்போது தொடங்கப்பட்டது?

வீரப்பன்: 1974ல் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. இதன் ஆரம்பத்துக்காக குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் பெரிதும் உழைத்தார். ஆரம்ப விழாவில் வண.பிதா.தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் வித்தியானந்தன் போன்றோர் கலந்து சிறப்பித்தனர்.

சுவடுகள்: தமிழர்களுக்கு என சில அமைப்புகள் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் உள்ளபோது நீங்கள் இந்த அமைப்பைத் தொடங்கவேண்டிய அவசியம் என்ன?

வீரப்பன்: நீங்களே கூறுகிறீர்கள் சில அமைப்புகள் என்று. என்னைப் பொறுத்தவரை எமது பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாக்க எத்தனை அமைப்புகள் தோன்றினாலும் பறவாயில்லை. அவற்றின் செயற்பாடுகள்தான் முக்கியம். எமது அமைப்பு சர்வதேச ரீதியாக பல்கலைக்கழக அறிஞர்கள், புத்திஜீவிகள் தொடர்போடு சமுக கலாசார பண்பாட்டுப் பரிவர்த்தனைகளை மேற்கொண்டு தமிழின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அரிய பங்காற்றி வருகிறது.

சுவடுகள்: தமிழ் ஆராய்ச்சி மாநாடு பற்றி?

வீரப்பன்: இவ்வமைப்பு பல்கலைக்கழக ரீதியில் தொடர்பை ஏற்படுத்தி உள்ளதே தவிர பெரியளவில் எந்தப் பயனையும் தரவில்லை.

சுவடுகள்: உங்களது அமைப்பின் செயற்பாடுகள் தற்போது எந்தளவில் உள்ளன?

**சஞ்சீவி**

*மாதஇதழ்.*
Post Boks 1205
7500, Holsterbro,
Denmark

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



வீரப்பன்: இவ்வமைப்பு குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. எம்மை யுனெஸ்கோ அங்கீகரித்துள்ளது. இதன்மூலம் உலகத் தமிழர்களுக்கும், தமிழிற்கும் உரிய அந்தஸ்து வழங்கப் பாடுபட்டு வருகிறோம். தவிர இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு யுனெஸ்கோ ஊடாக ஐ.நா. மூலம் ஒரு நிரந்தரத் தீர்வு காண முயன்று வருகிறோம். அத்துடன் உலகில் உள்ள சகல சிறுபான்மை இனத்தவர்களுக்கும் ஐ.நா.வில் அங்கம் பெற வழிவகைகள் செய்ய முயன்று வருகிறோம்.

சுவடுகள்: சுவடுகள் மூலமாக வாசகர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?


வீரப்பன்: எமது அமைப்பைச் சரியாகப் புரிந்துகொண்டு சரியான இலக்கிய ஆய்வை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். தமது கருத்தை வலியுறுத்தி உறுதியாகத் தெரிவிப்பதன் மூலம் ஒவ்வொரு தமிழனும் எமது கலை இலக்கிய மேம்பாட்டிற்கு உதவமுடியும். பொதுவாகவே இலங்கைத் தமிழர்கள் மொழி வளர்க்கிறார்கள் . ஐரோப்பாவில் இருந்து மாத்திரம் 35க்கு மேற்பட்ட தமிழ்ச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இது மகிழ்ச்சிக்குரியதும், தமிழர்களின் வரலாற்றில் போற்றப்பட வேண்டிய விடயமுமாகும். இந்த நிலை தொடரவேண்டும். ஆனால் இந்த நிலை தமிழ்நாட்டில் இல்லை. தமிழ்நாட்டில் தமிழிலும், தமிழ் மக்களிலும் வேற்று மொழியினது ஆதிக்கம் நிலவுகிறது. எதிர்காலத்தில் இந்த நிலை ஐரோப்பாவில் வாழும் தமிழர்களுக்கு ஏற்படக் கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன்.

# இதுதான் விலைவிபரம்

வடக்கில் தற்போது நிலவும் விலைவிபரங்கள் சில இவை. அரிசி: 40 - 60 ரூபா வரை, மா: 32 - 40 ரூபா , சீனி: 45 - 95ரூபா, பருப்பு: 80 - 95ரூபா, மிளகாய் 105 - 120ரூபா, பாண்: 11 - 16ரூபா, மல்லி: 75 - 95ரூபா, மண்ணெய்: 100 - 300ரூபா, டீசல்: 120 - 250ரூபா, பெற்றோல்: 400 - 1000ரூபா, தே.எண்ணெய்: 40 - 140ரூபா, (குழந்தைகளின்) பால்மா: 95 - 150ரூபா, சண்லைட்: 25 - 60ரூபா, சீமெந்து: 600 - 1000ரூபா, உரம்: 2000 - 2500ரூபா, தேங்காய்: 20 - 40ரூபா, கத்தரிக்காய்: 45 - 60ரூபா, கரட்: 100 - 120ரூபா, போஞ்சி: 100 - 120ரூபா, விறகு (50கிலோ): 150 - 200ரூபா, மீன்: 90 - 150ரூபா, இறைச்சி: 140 - 160ரூபா, பனடோல் (ஒன்று): 1/75 - 2/50. வைத்திய ஆலோசனைச் செலவு (ஒருதரம்): 75 - 150ரூபா

உணவுப் பஞ்சம், மருத்துவ வசதியின்மை காரணமாக 'இயற்கை மரணம்' சாதாரணமாகிவிட்டது.

தகவல், நன்றி: புதிய பூமி



# சுவடுகள்

பதினெட்டு வருடம் நீண்டதாக வர்ணிக்கப்படும் தமிழர்களின் போராட்டம் அகதிகளை மட்டும் தாராளமாக உற்பத்தி செய்திருக்கிறது. தென்துருவம் தவிர்ந்த எல்லாக் கண்டங்களிலும் ஈழத் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரும் நிலை தொடர்கிறது. மக்கள் தொகையில் கணிசமான பகுதி தாய்நாட்டிலும், வெளிநாட்டிலும் அகதிகளாக அலைகிறது.

ஈழத்திலும் இந்தியாவிலும் வாழும் பலலட்சம் அகதிகளின் நிலை சொல்லுந்தரமன்று. ஈழத்தில் வாழும் பல தமிழ் அகதிகள் வேறு மாவட்டங்களில் பிச்சை எடுத்து உண்பதுவும், சொந்த மாவட்டங்களில் ஒரே சோற்றை இரண்டு மூன்று தினங்கள் ஊறவைத்து அதன் கஞ்சியைக் குடிப்பதுவும் ஐரோப்பாவில் வாழும் தமிழ் அகதிகள் பலருக்குத் தெரியவராத உண்மை. இந்தியாவில் வாழும் ஈழத்து அகதிகளைப் பொறுத்தவரை அடிப்படைப் பொருளாதாரப் பலம் இல்லாமல் தவிப்பது ஒருபுறமிருக்க, அங்கு ஏற்கனவே அகதிகள்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் ராஜீவின் படுகொலைக்குப் பிறகு உச்சம் பெற்றுள்ளன. புலிகளை அடக்குவதாகக் கூறிக்கொண்டு தமிழக அரசு அகதிகள்மீது தனது கைவரிசையைக் காட்டி வருகிறது. சொந்தச் சகோதரர்களாக ஈழத்தமிழர்களை ஏற்ற தமிழகம், இன்று விரோதிகளாகப் பார்க்கின்ற போக்கு வளர்ந்துள்ளது. தமிழர்களே அதிகாரத்தில் இல்லாத நாடுகளில் தமிழர்கள் நடத்தப்படும் விதத்திலும் பார்க்க மிகவும் மோசமான முறையில் ஈழத்தமிழர்களைத் தமிழக அரசு நடத்துகிறது. இதற்கு எதிர்க்குரல் தெரிவிக்க ஓரிரு சிறிய அரசியல் அமைப்புகளே முன்னிற்பதும், தமிழினத்தின் காவலர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்ட பெரிய கட்சிகள் ஈழத் தமிழர்களை நட்டாற்றில் விட்டதுவும் வேறு கதை.

ஈழத்தின் வடபுலத்தில் வெளிநாடு செல்வது வாழ்வின் முக்கிய லட்சியங்களில் ஒன்று எனுமாறு மக்களின் வெளியேற்றம் தொடர்கிறது. மக்களில் இருந்து அந்நியப்பட்ட போராட்டமும் அதன் குத்தகைக்காரர்களும் துப்பாக்கி முனையில் மக்கள் வெளியேறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிலையில் உள்ளனர். தாமாக முன்வந்து போராட்டத்தில் பங்கேற்க வேண்டிய மக்கள், போராட்டத்தில் இருந்து விலகி ஓடுவதற்கான காரணம் தெரியாதவர்கள் பலவந்தமாக மக்களைத் தமக்குப் பின் திரட்டுவதுடன் மக்கள் தாமாகவே அணிதிரள்வதாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழத்தில் இருந்து பல காரணங்களாலும் வெளியேறும், வெளியேறிய மக்கள் கொழும்பிலும், வெளிநாடுகளிலும் படும் அவலங்கள் பலராலும் கவனத்தில் எடுக்கப்படாமல் இருக்கிறது. ஐரோப்பாவின் ஒன்றிய அமைப்பு அகதிகள் தொடர்பாக எடுத்துள்ள, எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் இந்த நாடுகளில் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய கேள்வியை எழுப்புகின்றன. ஜேர்மனியில் அரசு அண்மையில் தமிழர்கள் உட்பட லட்சக்கணக்கான அகதிகளைத் திருப்பி அனுப்புவது என்று எடுத்த முடிவு இதற்குச் சிறந்த உதாரணமாகும். இந்த முடிவு எடுக்கப்பட்டபோதுதான் அங்கு இருந்த பல தமிழர்களுக்கு தாம் வேற்று நாட்டில் அகதிகளாக இருக்கிறோம் என்ற நினைவே எழுந்தது. அதுநாள்வரை தமக்குள் குறைந்தபட்ச அடிப்படையில், ஜேர்மனியில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்க்கவேணும் ஒன்றுபட்டிராத தமிழர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தனர். இந்த நிலை ஜேர்மனியில் வாழும் தமிழர்களுக்கு மட்டும் பொதுவானதல்ல. ஏனைய நாடுகளிலும் இதே நிலையே நிலவுகிறது.

ஐரோப்பாவில் தமிழ் மக்கள் வருகைக்கு முன்னரே போதைப் பொருள் கடத்தல் உட்பட பல சமூகவிரோதச் செயல்கள் நிகழ்ந்தாலும் இச்செயல்களில் அகதிகளாக வந்த தமிழர்கள் சிலர் பங்கேற்றதை மறுப்பதற்கில்லை. இது தமிழ் மக்கள் பற்றிய எதிர்மறையான அபிப்பிராயம் உருவாகக் காரணமாக இருந்தது.

நாட்டைவிட்டு வெகு தொலைவு வந்துவிட்டதனால் தமக்கும் தாய்நாட்டுக்கும் தொடர்பில்லை என்பது போலப் பலர் நடந்துகொள்வது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது.

அண்மைக்காலங்களில் ஐரோப்பாவில் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக அதிகரித்துவரும் வன்முறைகளும், நவநாசிஸ்டுகளினதும், வெளிநாட்டவர்க்கு எதிரான அமைப்புகளினதும் வளர்ச்சியும் இந்த நாடுகளில் எம்மவரது எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. இது ஒரு தற்செயல் நிகழ்ச்சி அல்ல என்பதும், இந்த வளர்ச்சியை இரண்டாம் உலகமகா யுத்தகாலத்துடன் ஒப்பிடுவதும் இன்றைய சூழலில் அவசியமானவை.

ஜேர்மனியில் நிகழ்ந்த நடவடிக்கை வேறு நாடுகளில் பின்பற்றப் படாது என்று யாரும் உத்தரவாதம் தரமுடியாது. நாம் இதே நிலைமையில் எமது பிரச்சனை இல்லைத்தானே என்று ஒதுங்கி விடுவோம் என்றால் நாளை நாம் எமது விருப்பிற்கு மாறாக திருப்பி அனுப்பப்படும் நிலை ஏற்படலாம். அவ்வாறு திருப்பி அனுப்பப்படும்போது எம்மில் பலர் அரசாலோ, கொழும்புத் தமிழ்க் குழுக்களாலோ புலிகளாலோ கொல்லப்படும் அல்லது துன்புறுத்தப்படும் நிலை உள்ளது. இவ்வாறான நிலைமையில் இங்குள்ள பிரச்சனைகளைச் சமாளிக்கவேணும் நாம் எமது அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபடல் இயலுமா என்ற கேள்வி எழுகிறது.

சுவடுகள்
ஆவணி - புரட்டாதி 1991

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

சுவடுகள்



# கிறம்சியின் நூறாண்டு நிறைகிறது



உருவத்தில் சிறிய மனிதர், ஆனால் பெரிய கொம்யூனிசக் கோட்பாட்டாளர், அந்தோனியோ கிறம்ஸி. இத்தாலியின் சார்டினியாவில் 22.1.1891ல் பிறந்து 1937ல் முசோலினியின் தனிமைச் சிறையில் உயிர்நீத்தவர் கிறம்ஸி. பதினொரு ஆண்டுகள் தனிமைச் சிறையில் வாழ்ந்து 46வது வயதில் உயிர்நீத்த கிறம்ஸி இத்தாலியக் கொம்யூனிஸ்டுகளின் முன்னோடிகளில் ஒருவராகக் கணிக்கப்படுகிறார்.

சார்டினியாவில் ஏழைத் தொழிலாளி ஒருவரின் மகனாகப் பிறந்தவர் கிறம்ஸி. சார்டினியா றோமின் வடக்கே இருந்தாலும் வறுமை நிறைந்த தெற்கு இத்தாலியுடன் சேர்த்து 'வறுமையான தெற்கு' என்றே கருதப்பட்டது. கிறம்ஸிக்கு இயல்பாக குட்டையான உடலமைப்பும், கூனலான முதுகும், பல குறைபாடுகளும் சிறுபிராயம் தொட்டே இருந்தன. எனினும் அவர் பள்ளியில் முதன்மையாக விளங்கினார். ரொறினோவில் உயர்கல்வி கற்றார். இங்கு தனது மொழி, கலாசார ஆர்வத்தை வளர்த்து ஒரு பத்திரிகை ஆசிரியராகத் தனது கடமையைத் தொடங்கினார்.

புரட்சிகர நாளேடான **L'ordine Nuvo** (புதிய ஒழுங்கு) வெளிவரப் பெரும் பங்காற்றினார். இது அவருக்கு விரைவாக வளர்ந்து கொண்டிருந்த, உழைக்கும் மக்களின் புரட்சிகர சக்திகளிடையே பெரும் மதிப்பை ஏற்படுததியது. இக்காலகட்டத்தில் ரொறினோவில் பெரிய ஃபியட் கார்த் தொழிலகங்கள் செல்வாக்காக விளங்கின. 1919 - 20 காலப் பகுதியில் ரொறினோவில் புரட்சிகர சக்திகள் தொழிற்சங்கங்களை இந்தத் தொழிலகங்களில் உருவாக்கின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பினும் உற்பத்திப் பொருட்களின் மீதான தொழிலாளர்களின் உரிமை மறுக்கப்பட்டு வந்தது. இவர்களுக்கு மற்றைய நகரங்களில் இருந்து, மறுசீரமைக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் ஆதரவோ சோசலிசக் கட்சியின் ஆதரவோ கிடைக்கவில்லை. தொழிற்சங்கங்களிலும் கொம்யூனிஸ்ட் கட்சி உருவாக வாய்ப்பான நிலை இருக்கவில்லை. ஃபியட் நிறுவன உரிமையாளர் அக்னெலி (தற்போதைய உரிமையாளரின் பாட்டனார்) கிறம்ஸியை விலைகொடுத்து வாங்க முயன்றார். இம்முயற்சி சரிவராதபோது பொலிஸ், ராணுவத்தைப் புரட்சியாளர்களின்மீது ஏவினார்.

சோசலிசக் கட்சியில் இருந்த நீண்டகால கருத்து வேறுபாடு காரணமாக 1921ம் ஆண்டு கட்சியில் இருந்து பிரிந்த இத்தாலியக் கொம்யூனிஸ்ட் கட்சி உருவாக கிறம்ஸி முக்கிய காரணமாக இருந்தார்.

கிறம்ஸி மொஸ்கோவில் ஒன்றரை வருடங்கள் கொம்யூனிஸ்ட் கட்சி (இத்தாலி)யின் மொஸ்கோ கிளைச் செயலாளராக இருந்தார். இந்தக் காலகட்டத்தில் (1922) முஸோலினி றோம் மீது படையெடுத்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினான். இத்தாலி இவ்வாறான ஒரு சிக்கலில் மூழ்கும் என கிறம்ஸி சில வருடங்கள் முன்னரே எச்சரித்திருந்தார். இத்தாலியில் பாசிஸத்தின் முக்கிய வளர்ச்சி பற்றி ஒரு தெளிவான கண்ணோட்டத்தை இவ்வாறு சில தலைவர்கள் கொண்டிருந்தனர். இத்தாலிய கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் முஸோலினியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரப் பெரிதும் உழைத்தனர்.

1924ல் இத்தாலி திரும்பியதும் பாசிசத்தின் பயங்கரவாதத்தாலும் உட்பூசலாலும் சிதறியிருந்த கொம்யூனிஸ்ட் கட்சியை மீளமைக்க கிறம்ஸி இரு வருடங்கள் உழைத்தார்.

இவரின் வாழ்க்கையின் இறுதிப் பகுதி சோடிக்கப்பட்ட வழக்குகளிலும், சிறைச்சாலைகளிலும் கழிந்தது. இந்தக் காலப்பகுதியில் அவர் பெரிதும் நோய்வாய்ப் பட்டார்.

றோமில் கைதாக முன்னர் கொம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் பாராளுமன்ற அங்கத்தினராகவும் இருந்தார். பாராளுமன்றத்தில் தனது கன்னியுரையை முஸோலினியினதும் அவனது பாஸிசக் கூட்டாளிகளதும் குறுக்கீடுகளுக்கு மத்தியில் நிகழ்த்தினார். அந்த உரை பாஸிசத்தினால் எதிர்காலத்தில் உருவாகப் போகும் ஆபத்துப் பற்றியதாக இருந்தது.

## சர்வதேச இலக்கியப் பரிசு

கடந்த யூன் மாதம் ஆர்ஜென்டீனாவைச் சோந்த எழுத்தாளரும், விமர்சகருமான அடொல்போ பியோய் கசாரஸ் என்பவருக்கு சர்வதேச இலக்கியப் பரிசான 'அல்பொன்சோ ரேயஸ் விருது' வழங்கப் பட்டுள்ளது. எழுபத்திஏழு வயதான அடொல்போ இருபதாண்டுக் கால மையக் கருவைக் கொண்டு எழுதிய புத்தகத்துக்காகவே இந்த விருது அவருக்கு வழங்கப் பட்டுள்ளது. இவரே இப்பரிசைப் பெறும் மாய, யதார்த்தவாத எழுத்தாளராவார்.

கடந்த வருடம் அடொல்போவுக்கு ஸ்பெய்ன் நாட்டில் 'செர்வன்ரஸ்' பரிசு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- லாபி -




இந்திய ராணுவ வெளியேற்றத்தின் பின்னர் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட யுத்தம் ஒரு வருடத்தையும் தாண்டித் தொடர்ந்து பல ஆயிரம் உயிர்களைப் பலியெடுத்து வருகிறது. ஒருபுறம் தேசிய தினத்தைக் கொண்டாடியபடி அரசும், மறுபுறம் மாவீரர் தினத்தைக் கொண்டாடியபடி புலிகளும் போரில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

புலி அழிப்பு என்ற போர்வையில் அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்த இலங்கை அரசு தமிழ்ப் பிரதேசங்களில் பொருளாதார வளங்களையும், சொத்துடைமைகளையும் அழித்து வருகிறது. மறுபுறம், அப்பாவிச் சிங்கள மக்களைக் கொன்றும், பல நூற்றாண்டு காலம் பாரம்பரியமாக வடக்கு கிழக்கில் வசிக்கும் முஸ்லிம் மக்களை அவர்களது பிரதேசங்களில் இருந்து விரட்டியும் தமது தமிழ்த் தேசியவாதத்தை முடுக்கிவிட்டுள்ளனர் புலிகள். 'புலி எதிர்ப்பு' என்ற ஒரே காரணத்துக்காக இலங்கை இனவாத அரசுக்கு ஆலவட்டம் பிடிக்கும் 'கொழும்பு இயக்கங்கள்' இலங்கை அரசின் தமிழின அழிப்புக்கு தார்மீக ஆதரவையும், நேரடி ஒத்துழைப்பையும் வழங்கி, தமிழ் மக்களது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் வகையில் செயற்படுகின்றன.

ஒரு வருடத்துக்கு மேலாக நிகழும் இந்தப் போரில் வடக்கு கிழக்கு மக்கள் யாவரும் பாதிக்கப்பட்டுள்ள போதும் கடும் பாதிப்பை கிழக்கு மாகாண மக்களே சந்தித்துள்ளனர். இந்தப் பகுதியில் இருந்து 'புலிகளின் வெற்றிகரமான பின்வாங்குதலை' அடுத்து அந்தப் பிரதேசத்தில் தனது ஆளுமையை நிலைப்படுத்த முயன்று வரும் இனவாத அரசின் ராணுவம் ஏனைய ஆலவட்ட இயக்கங்களின் ஒத்துழைப்புடன் கிழக்கில் நரபலி வேட்டையாடி வருகிறது. 1988 - 89 காலப் பகுதியில் தென்னிலங்கையில் பிரேமதாசா அரசின் கொலைகாரக் கும்பல்கள் நடத்திய கொலைப் பாணி தற்போது கிழக்கில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தலை இல்லாத உடல்கள், கைகால்கள் கட்டப்பட்டு கடலில் வீசியெறியப்பட்ட உடல்கள், ரயர் போட்டு எரிக்கப்பட்ட உடல்கள் என இந்தப் பகுதிகள் எங்கும் தமிழ் மக்களின் உடல்கள் கிடக்கின்றன. ஒருபுறம் இவ்வாறு கொலை வெறியாட்டம் நடத்தும் படைகள், அகதிமுகாம்களில் உள்ள

## கிழக்குப் பிராந்தியத்தின் அவலம்

சுதேசி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களைக்கூட தொண்டர் படைகளில் சேருமாறு அடித்தும், சித்திரவதை செய்தும் வருகின்றன.

கிழக்கு மாகாணத்தின் திருமலை, மூதூர், மட்டக்களப்பு பிரதேசங்கள் அண்மைக் காலமாகப் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. குறிப்பாக மீளக் குடியேற்றப்பட்ட மூதூர் பிரதேச தமிழ், முஸ்லிம் அகதிகள் தமது உயிருக்கு உத்தரவாதம் அற்ற நிலையில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றனர். கன்னித்தீவு, பள்ளிக்குடியிருப்புப் பகுதிகளில் உள்ள அகதிகளை சொந்த விருப்பிற்கு மாறாக இராணுவத்தினதும், ஊர்காவல் படையினதும் கட்டுப்பாட்டில் உள்ள 'கிளப்பன்பேக்' அகதி முகாமுக்கு மாற்ற மேற்கொண்ட முயற்சி, அந்த மக்களது உறுதியான எதிர்ப்பால் கைவிடப்பட்டது. எனினும் பச்சைநூல் அகதி முகாமில் இராணுவம் கைது செய்த 24பேரில் 12பேரை இதுவரை காணவில்லை. இவர்கள் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த நிலை பல அகதி முகாம்களிலும் தொடருவதால் முகாம்களில் வசிக்கும் மக்கள் மிகப் பயத்துடனேயே வாழ்கின்றனர். பச்சைநூல், தம்பலகாமம், கிண்ணியா பிரதேசங்களில் வாகன வசதி இல்லாமையால் இந்தப் பிரதேச மக்கள் பெருமளவு நாட்களைப் பட்டினியுடன் கழிக்கின்றனர். கிழக்கில் அகதிமுகாம்களில் வாழும் மக்களின் நலன்களை நேரடியாகக் கவனிக்கும் கிராம சேவையாளர்கள் இராணுவ கெடுபிடிகளுக்கு உள்ளாவதுடன் பலர் இனந்தெரியாத, சீருடை தரித்தவர்களினால் கடத்தப்பட்டு 'நன்கு கவனிக்கப்படுவதும்' அன்றாட நிகழ்ச்சிகள். இவ்வாறு அண்மையில் ஐந்து கிராம சேவையாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர். சண்முகலிங்கம் (குச்சவெளி), மாணிக்கராஜா (தம்பலகாமம்), எம்.பி.காருதீன் (மூதூர்) குருஞானலிங்கம் (மூதூர்) பரம்சோதி (குச்சவெளி) ஆகிய இவர்கள் பற்றிய விபரம் இதுவரை வெளியாகவில்லை. இந்த நிலை நீடிப்பதால் பலர் இந்தப் பிரதேசங்களில் பணியாற்ற மறுத்து வருகின்றனர்.

கிழக்கில் திகாமடுல்ல எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட அம்பாறை

**புதிய ஜனநாயகம்**

S.MATHIALAGAN
21,BALAJISING ROAD
SAIDAPET
MADRAS- 600015
INDIA.

மாவட்டத்தில் மாத்திரம் 31 சிங்களக் குடும்பங்களும் 410 முஸ்லிம் குடும்பங்களும், 5392 தமிழ்க் குடும்பங்களும் அகதி முகாம்களில் வசிக்கின்றன. இந்த அகதிகளின் அடிப்படைத் தேவைகளைப் பற்றிக் கவனியாது 'கம் உதாவ' நிகழ்ச்சிக்கு கோடிக்கணக்கில் செலவிட்டுக் களிக்கிறது அரசு. அகதிகளை உயிராபத்து நிறைந்த ராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் மீளக் குடியேற்றுவது தொடர்பாக ஆலோசித்து வருகிறது. இந்த மாவட்டத்தில் உள்ள 26 முகாம்களில் மூன்று முகாம்களில் சிங்களவர்களும், நான்கு முகாம்களில் முஸ்லிம்களும், மிகுதியில் தமிழர்களும் அடைக்கப்பட்டு வாழ்கின்றனர். இதில் விபுலானந்த மத்திய மகா வித்தியாலயத்தில் வசிக்கும் மக்களே மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

இலங்கை அரசாங்கத்துக்குள் நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த நிலையில்கூட தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ராணுவத் தீர்வு காண்பதில் சிங்கள அரசு உறுதியாக உள்ளது. அண்மையில் கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தில் அரச படைகள் நிகழ்த்திய நரபலி வேட்டை இன்னும் அந்தப் பிரதேச மக்களின் மனதில் மறக்க முடியாத காயத்தை ஏற்படுத்தியுள்ளது. இதே போன்ற சம்பவங்கள் இனியும் நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

கிழக்குப் பிராந்தியத்தில் நிகழ்ந்துவரும் நிகழ்ச்சிகள் இப்படியே தொடரும் பட்சத்தில் இன்னும் ஒருசில தசாப்தங்களில் இப்பிரதேசத்தில் இருந்து தமிழ் முஸ்லிம் மக்கள் துரத்தியடிக்கப்பட்டு சிங்களப் பிரதேசங்களாக இந்தப் பிரதேசங்கள் மாறிவிடும் அபாயம் உண்டு. இதைக் கருத்தில் கொண்டு, எமது போராட்டத்தை மக்கள் மயப்படுத்தி மக்களுக்கு அடிப்படை ஜனநாயகத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் வழங்கி முற்போக்கு சக்திகளை அணிதிரட்டி எமது போராட்டத்தை உறுதியாக முன்னெடுப்பதன் மூலமே எமது பாரம்பரியப் பிரதேசத்தை தொடர்ந்து பாதுகாத்து எமது தேசத்தை மீட்டெடுக்க முடியும். அத்துடன், கண்ணீர்த்துளிகளுடன் நாட்களைக் கடத்தும் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வுக்கு ஒரு விடிவையும் தேடமுடியும்.

* சுவிஸ் நாட்டைச் சேர்ந்த சுவிஸ் யூனியன் வங்கி மேற்கொண்ட ஆய்வின்படி உலகிலேயே வாழ்க்கைச் செலவு கூடிய நகரமாக ஒஸ்லோ விளங்குகிறது. இந்த

ஆய்வின்படி உலகில் வீட்டு வாடகை கூடிய நகரமாக டோக்கியோ விளங்குகிறது. தலாவருமானம் கூடிய நாடாக சுவிஸ் விளங்குகிறது. மதுபான, குடிவகைகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றிற்கு சூரிச்வாசி ஒருவர் 13253 குறோணர்கள் செலவிடுகையில் ஒஸ்லோவாசி 13312 குறோணர்கள் செலவிடுகிறார். இவர்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக (?) பம்பாய்வாசி இதே செலவுகளுக்கு 3490 குறோணர்கள் செலவிடுகிறார். உலகில் 48பெரிய நகரங்கள் இந்த ஆய்வில் கவனத்தில் எடுக்கப்பட்டன.

● சேதுபதி●

*சிறுவர் அமுதம்*

*ஐரோப்பாவின் ஒரேயொரு தமிழ்ச் சிறுவர் மாத இதழ். தொடர்புகள்:-*
**Amutham, Gladbacher Str.16, 5013 Elsdorf (Rhld). Germany**

## இரவல் ஓவியங்கள்

புத்தகங்கள் சஞ்சிகைகளை இலவசமாக நூலகங்களில் சுவைக்கலாம். தேவையாயின் வீட்டில் எடுத்துச் சென்று வாசிக்கலாம். இது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இன்று ஐரோப்பிய நூலகங்களில் இசைப்பிரிவுகளும் பல வருடங்களாக இயங்கிவருகின்றன. இங்கு செல்பவர்கள் தாம் விரும்பிய இசையைக் கேட்டு மகிழலாம்.

இந்த வசதிகளைவிட மேலும் அதிகமாகத் தற்போது நோர்வே நூலகங்களில், பிரபல நோர்வேஜிய ஓவியர்களின் ஓவியங்கள் இரவல் கிடைக்கின்றன. இந்த இரவல் ஓவியங்களை நீங்கள் விரும்பிய வேளைகளில் நூலகத்தில் இருந்து இரவல் பெறலாம். அவற்றை உங்கள் வீட்டில் மூன்று மாத காலம்வரை மாட்டி வைத்து ரசிக்கலாம். அதன் பின்னர் நீங்கள் விரும்பினால் அதே ஓவியத்தை விலை கொடுத்து வாங்கலாம். அல்லது திருப்பி நூலகத்துக்கடுக திருப்பி வழங்கிவிட வேண்டியதுதான். இந்த முறை நோர்வேஜிய மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

*- சித்திரகுப்தன் -*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## ஈழத்தில் இருந்து ஒரு கடிதம்
## தொடரும் கடத்தல்கள்......

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் பல்வேறு கருத்துகளைக் கொண்டவர்களும், தமது சுயஅபிப்பிராயங்களைப் பகிரங்கமாக வெளியிடவும் அதுபற்றி ஏனையோருடன் கலந்துரையாடவும் வாய்ப்புகள் நிலவின. இந்த நிலை படிப்படியாக மாறி இயக்கங்கள் ஆயுதரீதியாக பலம் பெறத் தொடங்கியபோது தமது இயக்கக் கருத்தே மேலோங்கவேண்டும் என்ற முனைப்பில் அபிப்பிராயபேதம் உடையோரை மிரட்டுதல், தாக்குதல் என்று உருவாகி அழித்தல்வரை வளர்ந்தது. 1986கடைசிப் பகுதிக்குப் பின்னர் வேறு கருத்து உடையோருடன் ஆயுதங்கள் மட்டுமே பேசும் என்ற நிலை உருவாகியது. போராட்டம் ஆரோக்கியமான வழியில் செல்ல வெவ்வேறு கருத்துகள் முட்டிமோதுதல், விவாதத்தினூடாகத் தெளிவு பிறத்தல் என்பன அவசியமானவை. ஆனால் எமது சூழலில் இந்த நிலை இனி உருவாகுமா என்ற கேள்வி இன்று பலர் மனதிலும் உருவாகும் வகையில் அச்சம் தரும் சம்பவங்கள் நிகழ்கின்றன. எம்மிடையே மாறுபட்ட கருத்துடையோரை அழித்தல், எமது பொது எதிரியான இலங்கை அரசுக்குப் பலம் சேர்க்குமேயன்றி எமது விடுதலைக்கு ஒருபோதும் உதவாது.

இந்நிலையில் தற்போது யாழ் நிலைமைகள் பற்றி இலங்கையில் இருந்துவந்த கடிதம் ஒன்றை அப்படியே பிரசுரிக்கிறோம். எமது சூழலில் அரசியல் ரீதியாக மாறுபட்ட கருத்துடையோர் என்பதற்காக எவராவது மிரட்டலுக்கோ, தாக்குதலுக்கோ உள்ளாகினால் அதற்குக் காரணமானோர் விடுதலைக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் என்பதே எமது அபிப்பிராயமாகும். அரசியல் காரணங்களுக்காக எவர்மீதும் வன்முறையோ மிரட்டலோ பிரயோகிக்கப்படக்கூடாது என்பதை இச்சமயத்தில் வலியுறுத்த விரும்புகிறோம். விடுதலைப்புலிகள் தம்மிடமுள்ள அரசியற் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும், மனித உரிமைகட்கும், மாற்றுக் கருத்துகட்கும் புலிகள் அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

● சுவடுகள்

தீப்பொறி அமைப்பை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான கேசவன், பல்கலைக்கழக மாணவர் இருவர் உட்பட 10பேர் மே மாதம் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு, அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிவதற்கு முன்னர் மீண்டும் 4 பேர் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் 30ந் திகதியன்று யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த த.செல்வநிதி, மனோகரன், இன்னொரு பெண் (பெயர் தெரியவில்லை) உட்பட வவுனியா மாவட்டப் பாடசாலையொன்றின் ஆசிரியர் தில்லைநாதன் ஆகியோரே புலிகளால் கடத்தப்பட்டோராவர்.

கவிஞரும் பெண்ணிலைவாதியுமான த.செல்வநிதி (செல்வி, தமயந்தி என்ற பெயர்களாலும் அழைக்கப்படுபவர்) கலைப்பீட 3ம் வருட மாணவியாவார். 'சொல்லாத சேதிகள்' என்ற கவிதைத் தொகுதியில் வரும் கவிஞர்களில் ஒருவரான இவர் யாழ் பெண்கள் ஆய்வு வட்டத்தின் உறுப்பினரும் ஆவார். யுத்தத்தினால் அநாதைகளாக்கப்பட்ட பெண் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக ஏற்கனவே புலிகளால் கொல்லப்பட்ட விரிவுரையாளர் ராஜனி திரணகமவினால் ஸ்தாபிக்கப்பட்ட 'பூரணி' பெண்கள் நிலையத்தின் பராமரிப்பாளர்களில் ஒருவராகவும் விளங்கினார். இப் பூரணி நிலையமும் ஏனைய பொது நிறுவனங்களைப் போலவே புலிகளால் 'விழுங்கப்பட்டது' தெரிந்ததே.

செல்வி, புளொட்டின் உட்கட்சி ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகள் காரணமாக தான் அங்கம் வகித்த அதன் பெண்கள் அமைப்பில் இருந்து ஒதுங்கினார். 'தோழி' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த செல்வி புளொட்டின் பெண்கள் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராவார்.

30ம் திகதி செல்வி தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற புலிகள் தாம் அவரை ஒன்றரை மணி நேரத்தில் 'விசாரித்துவிட்டு' விடுவதாகக் கூறி அழைத்தார்கள். வீட்டார் அனுப்பமுடியாது என மறுக்கவே அவரைப் பலவந்தமாக இழுத்துச் சென்றுள்ளனர். நாடக அரங்கவியல் விசேட பட்டப்படிப்பு மாணவியும், நாடகங்களில் ஆர்வமுடன் பங்கேற்று நடிப்பவருமான செல்வி, பெண்கள் சம்பந்தமான பெங்களூர் மகாநாட்டிற்கு மறைந்த பெண்ணிலைவாதியும், கவிஞருமாகிய சிவரமணியுடன் சென்று கலந்துகொண்டவர். ஆனால் புலிகளோ, தம்மைப் பற்றிய தகவல்களை வெளியிலுள்ள பத்திரிகையாளர்கட்கு அனுப்புபவர் என்றும், கிறிஸ்தவ நிதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளவர் என்றும் குற்றம் சாட்டி அவரைக் கடத்தியுள்ளனர். புலிகளின் 'அலுவலகங்களில்' இக்கடத்தல் குறித்து விசாரித்தபோது 'உயிருக்கு ஆபத்தில்லை!' என்று மட்டும் கூறினர்.

வணிகபீட மாணவரான மனோகரனையோ, ஆசிரியர் தில்லைநாதனையோ கடத்தியதற்கான காரணம் புலிகளால் அறிவிக்கப்படவில்லை. எனினும் கேசவனுடன், பல்கலைக்கழக மாணவர்களான கோவிந்தன், சிறீனிவாசன் ஆகியோர் கைது செய்யப்பட்டபின்னர் புலிகள் யாழ் பல்கலைக்கழகத்தில் நடத்திய 'கொள்கை' (கொலை?) விளக்கக் கூட்டத்தின் முடிவில் அவர்களை மன்னித்துவிட முடியாதா? என்ற கேள்வியை எழுப்பியவர் இந்த மனோகரனே என்பது குறிப்பிடத்தக்கது. (இதுபற்றி எமது முதலாவது பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.)

புலிகள் தங்களின் இத்தகைய சனநாயக விரோத பாஸிஸத்தனமான நடைமுறைகளினூடாக எமது தேசத்தில் பல்வேறு துறை சார்ந்த புத்திசீவிகளையும், சனநாயகவாதிகளையும், போராளிகளையும் ஒன்றில் கொன்றோ, நாடுகடத்தியோ அல்லது சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தோ தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத் தொடர்ந்து முயன்று வருகிறார்கள். தமிழீழ விடுதலையானது புலிகளுக்கும், காடிகளுக்கும்தான் சொந்தம் என்று புலிகள் நினைக்கிறார்கள் போலும். மனிதர்களே அற்ற ஒரு தேசத்தில், மனிதத்துவத்தின் புதைமேட்டின்மீது புலிக்கொடியை நாட்டி ஆட்சி செலுத்தும் வெறி புலிகளுக்கு இருப்பது பற்றி யாரும் பேசாமல் மௌனமாக இருப்பது எத்தனை நாளைக்கு?

உங்கள் ஒவ்வொருவருக்குமான சவக்கிடங்கையும் நீங்களே வெட்டுங்கள் எனப் புலிகள் உத்தரவிடும்வரை கேள்விகள் கேட்காமல் இருக்கப்போகிறோமா?

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் என முழங்குவோம். புலிகளின் காட்டுமிராண்டித்தனத்தை அம்பலப்படுத்துவோம். தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொருவருடைய உரிமை மட்டுமல்ல, கடமையும்கூட இது.

நண்பர்கள் (ஈழம்)


எந்நேரத்திலும் கொல்லப்படக்கூடிய சூழலில் இருந்து வரும் இப்பிரசுரத்தை இயன்றவரை பரவச் செய்யுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓர் அமெரிக்க மடல்



## விக்கி எழுதுவது

சென்ற வருடத்தின் அந்த நாட்கள் நினைவுக்கு வருகின்றன. பல்கலைக்கழக வேலைகளும் ஆய்கூடக் கடமைகளும் முடிந்து முன்னிரவில் வீடு திரும்பும்போது உடலில் களைப்பும் மனதில் ஒரு வெறுமையும் நிறைந்திருக்கும். அடுத்த நாளுக்கான ஒழுங்குகளைச் சரிபார்த்து வைத்துவிட்டு ஓரிரு கடிதங்களை எழுதலாம். சில டொலர்களைக் கரைத்து யாரையாவது கூப்பிட்டு நாலு வார்த்தைகள் பேசலாம். ரவிசங்கரை, எல்.சங்கரை, இளையராஜாவை, மனோ - ஜானகியை, தாய் மற்றும் ஆபிரிக்க நாட்டுப் பாடல்களை மீண்டும் ஒரு தடவை கேட்கலாம். இவ்வாறாகத் தொடர்கின்ற நாட்கள் கொஞ்சம் கொஞ்சமாய் ஒரு தனித்துப்போன உணர்வைத் தோற்றுவிக்கும். தமிழிலேயே வாழ்ந்து பழகியதோ என்னவோ - அயலில் தமிழர்கள் இல்லாதிருப்பது ஒரு சாபமாய்ப்படும். அவ்வப்போது மனதில் தேங்கும் உணர்வுகளை -அவதானிப்புகளை சில தாள்களில் நிரப்பி, எழுதும் கடிதங்களுக்கு ஒரு பிற்சேர்க்கையாய் இணைத்து அனுப்புகையில் இலேசாகிவிட்டதாக மனம் உணரும்.

கிடைக்கும் ஓய்வு நேரங்களில் தமிழில் வாசிப்பதற்கு வசமாக வட அமெரிக்காவில் ஏதாவது வாய்க்குமா என்று திரிந்தபோது ஓரிரு சஞ்சிகைகளின் பெயர்கள் தட்டுப்பட்டன. கனடாவில் இருந்து வெளிவரும் சில பத்திரிகைகள் கிடைத்தன. பின்னால் 'சக்தி'யின் அறிமுகம் கிடைத்து அதன்மூலம் ஐரோப்பாவில் இருந்து வெளியாகும் தமிழ் இதழ்களின் பரிச்சயம் கிடைத்தது. இவை, ஒரு தமிழ்ச் சூழலில் இருக்கும் திருப்தியை ஏற்படுத்தியது சத்தியம். இவற்றுடன் உட்காரும்போது புது இலக்கியமும், நவீன சஞ்சிகைகளும் எமது தேசத்தில் பிரபலம் பெற்றிருந்த பிந்திய எழுபதுகளும் முந்திய எண்பதுகளும் வந்து திரும்பும்.





மேற்குலகை ஒவ்வொரு தமிழனும் எப்படிப் பார்க்கிறான் என்று நான் யோசிப்பதுண்டு. இன்னொரு தமிழனுடன் பேசக் கிடைக்கும்போது இக்கேள்வியும் நிச்சயம் வரும். நோர்வேயில் இருக்கின்ற ஒரு பாடசாலைநாள் நண்பனுடன் கதைக்கும்போது, வேறுபட்ட கோணங்களில் இருந்தான எமது பார்வைகளை மற்றவர்களுடன் ஏன் பகிர்ந்துகொள்ளக் கூடாது என்று தோன்றிற்று. இது தொடர்பாகச் 'சுவடுகளை' அணுகவும் முடிந்தது.

நேரம் கிடைக்கும்போது சுவடுகளில் ஏதாவது எழுதலாம் என்று நினைத்திருக்கிறேன். பத்து வருடங்களின் முன்னால் வெறுங்கால்களும் சாறமுமாக பனங்கலட்டிகளினூடாகவும் வயல்வெளி வீதிகளிலும் சைக்கிள் மிதித்த ஒரு மனிதனாக - பின்னால் காந்தி லொட்ஜிலும், கிறீன்லண்ட்ஸிலும் சாப்பிட்டு வெள்ளவத்தையில் தாழை மரங்கள் மண்டிய கடற்கரையில் காற்று வாங்கிய அதே மனிதனாகவே மேற்குலகை இன்னும் பார்க்கிறேனா என்பது தெரியவில்லை. ஆனால் அந்த மண்ணின் மணம் இன்னமும் ஒட்டிக் கொண்டிருப்பது நிஜம்.

உங்கள் கண்களினூடாக நுழையும் மேற்குலகம் தொடர்பாகவும் எனது பார்வை குறித்ததுமான உங்கள் கருத்துகளை 'சுவடுகள்' வரவேற்கும் என்று நம்புகிறேன்.

*அமெரிக்காவின்*
*மஸாசுசெட்ஸ் மாநிலத்திலிருந்து*
*விக்கி -*
*செப் 11, 1991*

# வீரத்தாயின் வீரமைந்தன்

அம்மா!
எப்பொழுதும் இல்லையென்றாலும்
சிலவேளைகளில் வருவாய் நீ.
000
'மூட்'குலைந்து.....
வாழ்வு நாடகத்தில் 'மேக்கப்' கலைந்து.....

சோகத்தின் சோர்வும்
சோர்வில் ஒரு சோகமும்
சேரும்பொழுது-

"நான் இருக்கிறேனடா" என
மடியை விரிப்பாய்

வந்து விழலாம்.
-பின்
நீயே சொல்வாய்
கோழையென,

நான் வரவில்லை
போகிறேன்-
அழுதுகொண்டுதான்.

க.ஆதவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை அரசு எதிர்பாராதவிதமாக நெருக்கடி ஒன்றை அண்மையில் எதிர்நோக்கியது. ஆளும் கட்சியில் பல உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகள் பலவற்றுடன் இணைந்து கொலை, அதிகார துஷ்பிரயோகம், இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணாமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் ஜனாதிபதி பிரேமதாசா பதவி விலகவேண்டும் என வலியுறுத்துகின்றனர். தாம் பதவி விலகாமலேயே மாற்றங்களைச் செய்யத் தயாராக இருப்பதாக பிரேமதாசாவும், அதற்குத் தாம் தயாரில்லை; பதவிவிலகலும் ஜனாதிபதி ஆட்சி முறை இலங்கைக்குத் தேவையா என சர்வசன வாக்கெடுப்பு அவசியம் என எதிரணியினரும் வலியுறுத்துகின்றனர். தற்காலிகமாக பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்து பிரச்னையைத் திசைதிருப்பிய பிரேமதாசா இதே நெருக்கடியைத் தொடர்ந்தும் எதிர்கொள்ளவேண்டி உள்ளது. எதிரணியினர் கூறுவது போல ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்கப்பட்டு அதிகாரமுடைய பாராளுமன்ற ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டுமா என்று சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கேள்வியை நோர்வேயில் தற்போது வசிக்கும் கவிஞரும், அரசியல் ஆய்வாளருமான வ.ஐ.ச.ஜெயபாலனிடம் எழுப்பினோம். அவரது பதில் இதோ

முதலில் தமிழர்களின் தலைமைக்குத் தென்னிலங்கையில் நிலவும் முரண்பாடுகளையோ, இந்து சமுத்திரத்தில் தானே பிரதானி என நினைக்கும் இந்தியா, எந்த இனக்கொலைக்கும் ஆதரவு தந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தினுள் நுழைய முயற்சிக்கும் சீனா, இலங்கை அரசு, தென்னிலங்கை அரசியற் சக்திகள் இவர்களுக்கிடையே நிலவும் முரண்பாடுகளைக் கையாளும் வல்லமையோ இல்லை என நிரூபணமாகி உள்ள இந்தச் சூழலில், தென்னிலங்கையில் ஜனாதிபதி அமைப்புமுறை தொடர்பாக நிகழும் சர்வசன வாக்கெடுப்பை அரசியல் ரீதியாகக் கையாளும் வல்லமை உண்டா என்ற கேள்வி இருக்கிறது. அரசியல் ரீதியாக முரண்பாடுகளைக் கையாளும் வல்லமையை 1940இல் இருந்தே தமிழ்த் தலைமைகள் கொண்டிருக்கவில்லை. இவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே இது தொடர்பான கருத்துகளைக் கூறலாம்.

இது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையா, பாராளுமன்ற ஆட்சி முறையா மக்களால் ஏற்கப்படும் என்பதைத் தீர்மானிக்கும் ஒரு சர்வசன வாக்கெடுப்பாக மட்டும் அமையாமல், பிரேமதாசாவா அல்லது லலித்தும் எதிரணியினருமா மக்கள் அங்கீகாரத்தைப் பெறுவது என்பதையும் தீர்மானிக்கும் ஒரு வாக்கெடுப்பாக அமையும்.

பிரேமதாசா நீண்ட காலமாக

# இலங்கை அரசின் நெருக்கடியில் தமிழர்கள்



அரசியலில் இந்திய எதிர்நிலையை ஓரளவு உறுதியாக எடுத்திருக்கிறார். அவர் தோற்பது விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை பெரிய இழப்பாக அமையும். ஏனெனில் இந்திய எதிர் நிலைப்பாடு கொண்ட அரசு கொழும்பில் உள்ளவரை அந்த அரசுடன் போராடுவதோ அல்லது தேவையெனில் சமாதானத்துக்குப் போவதோ விடுதலைப் புலிகளுக்கு இலகுவாக இருக்கும். இந்தியாவின் மத்திய மாநில அரசுகள் அல்லது இவற்றுக்கு வெளியே இந்தியா தொடர்பாக இருந்த சாதகமான நிலைமைகளைப் புலிகள் தற்போது இழந்துள்ளனர். இது புலிகளுக்கு logisticalஆக சிக்கலை ஏற்படுத்தும். கொழும்பில் இந்திய எதிர்நிலை அரசு இருப்பது புலிகளுக்கு அரசியல் ரீதியாகக் கடைசி வாய்ப்புகளை அளிப்பதாக இருக்கும். பிரேமதாசா வீழ்வதால் தற்காலிகமாகவேனும் இந்தியா – புலி முரண்பாட்டைக் கையாளக்கூடிய, இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெறக்கூடிய அரசு கொழும்பில் ஏற்பட்டு, இந்திய இலங்கை ஒப்பந்தமும் அத்துடன் ஈபிஆர்எல்எஃப்உம் முதன்மைப் படுத்தப்பட வாய்ப்பு உண்டாகும்.

இத்தகைய சூழல் விடுதலைப்புலிகளுக்கு நெருக்கடியையே ஏற்படுத்தும். குறிப்பாக ஆனையிறவுப் பகுதிகளில் 8000 படையினர் உள்ளனர். அவர்களைச் சூழ பரந்தன், முரசுமோட்டை, பரந்தன், பூநகரி போன்ற இடங்களில் புலிகள் நிற்கிறார்கள். இந்த மாரிகாலத்திற்கிடையில் இந்தக் களத்திலும், இங்கு அரசபடைகளின் வளங்கள் அதிகமாகக் குவிக்கப் பட்டுள்ளதால் பலம் குன்றிய வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் வெற்றிகளை ஈட்டாவிடில் கோடைகாலம் புலிகளுக்கு மிக நெருக்கடி உடையதாய் இருக்கும்.

யாழ்ப்பாணக் கடலேரியின் தென்புறமாக பூநகரி முதல் பரந்தன், முரசுமோட்டை, சுண்டிக்குளம் பகுதிவரை உள்ள கடற்கரை, வயல், பற்றைக்காடு

## நிகழ்வுகள்

* ஜேர்மனியில் இருந்து கார் டிக்கியில் பயணம் செய்து நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரிய இளம் தமிழ்த் தம்பதியினர் ஜேர்மனிக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.
* சௌந்தரராஜன், சுசீலா, சிலுக்கு ஸ்மிதா கலந்துகொண்ட இசை, நடன நிகழ்ச்சியில் பார்வையாளர்களிடையே குழப்பம் ஏற்பட்டதால் நிகழ்ச்சி இடையில் நிறுத்தப்பட்டது. இச்சம்பவத்தில் சில இளைஞர்கள் காயமடைந்ததுடன், நிகழ்ச்சி அரங்கும் சிறு சேதத்துக்குள்ளாகியது.
* சுவீடனில் தமிழர்கள் சிலர் வேறு தமிழர்களால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் சிலர் வீடுபுகுந்து கோடாலி மற்றும் ஆயுதங்களால் தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலை நடத்தியோர் புலிகளுக்காக பணம் சேகரிப்பவர்கள் என்றும், பணம் கொடுக்க மறுத்ததாலேயே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் சுவீடன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.
* கடந்த வருடம் தமிழ் நோர்வே இணைவுகூடத்தினால் நடத்தப்பட்ட **Tamiler Hjelper Tamiler** என்ற நிதி சேகரிப்பில் சேர்க்கப்பட்ட பணம் இலங்கையில் தமிழ்ச் சிறுவர்களுக்குச் செலவு செய்யப்பட்டவிதம் பற்றி றெட்பாணாவின் இலங்கைக்குப் பொறுப்பான அதிகாரி, இணைவுகூடத்தில் நிகழ்ந்த கூட்டம் ஒன்றில் விளக்கமளித்தார்.

– செய்தியாளன் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போன்ற வெளிகள் உள்ள பகுதிகளைக் கைப்பற்றி, யாழ்ப்பாணத்தை வன்னியில் இருந்து துண்டிக்கும் அரசின் நோக்கம், மாரிகாலத்திற்கிடையில் படைகள் தோற்கடிக்கப் படாவிடில் நிறைவேறலாம். இந்தியா, தமிழகத்தைப் பின்தளமாகப் புலிகள் பாவிக்காதவாறு துண்டித்துள்ள இந்நிலையில் இவ்வாறான வெற்றி ராணுவ சமநிலையைப் பாரதூரமாகப் பாதிக்கும்.

இரண்டாவதாக பிரேமதாச இருக்கும்வரைதான் பேச்சுவார்த்தை நடத்தப் புலிகளுக்குச் சந்தர்ப்பம் இருக்கும். இன்றுள்ள நெருக்கடியான நிலையில் பேச்சுவார்த்தை தொடர்பான வாய்ப்பை இழப்பது விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை புத்திசாலித்தனமான காரியமாக இராது. ஆனால் விடுதலைப் புலிகள் ராணுவரீதியாக எடுக்கும் கவனம் அரசியல் ரீதியாக எடுப்பதில்லை. இதனால் பேச்சுவார்த்தைகளைக் கொண்டு அரசியல் லாபம் எடுக்கும் வல்லமையை அவர்கள் இதுகாறும் உருவாக்கவில்லை. ராணுவரீதியாகவும் அண்மைக்காலத்தில் மரபுசார்ந்த ராணுவத்தைக் கட்டியெழுப்பும் வழியில் புலிகள் சென்றுள்ளனர். ஆயுதவரத்துப் பாதிக்கப்பட்ட இந்த நிலையில் பெருமளவு வெடிமருந்து அழிவை ஏற்படுத்தும் இந்தப் போர்முறையில் விட்டில் பூச்சிகள் விளக்கில் சென்று விழுந்து மடிவதைப் போல கெரில்லாக்கள் அழிவதைத்தான் கடந்த காலங்களில் உலக கெரில்லாப் போராட்ட வரலாறுகள் காட்டியிருக்கின்றன.

அதிகளவு வெளிகள் சார்ந்த பகுதிகளில் விடுதலைப் புலிகளை மரபுசார்ந்த யுத்தத்துக்கு இழுப்பதன் மூலம் அவர்களுக்கு அதிக சேதத்தை விளைவிக்கலாம் என்பதை வடமராட்சி யுத்தம், IPKF படையெடுப்பு, ஆனையிறவுத் தாக்குதல், கோட்டையை நோக்கிய படை நகர்வு என்பவற்றில் இருந்து இலங்கைப் படைகள் கற்றுள்ளதை உணர முடிகிறது. இன்றுள்ள சூழலில் ஆனையிறவு சார்ந்த வடக்கும், தெற்கும் பெரும் வெளிகளாக உள்ளதன் ஆபத்தைப் புலிகள் உணரவேண்டும். இன்றைய நிலையில் புலிகளுக்கு ஒரு பேச்சுவார்த்தை அவசியம். அப்பேச்சுகள், இலங்கை அரசு மழைகாலத்தைத் தாக்குப்பிடிக்க ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதாக மட்டும் அமைந்துவிடக்கூடாது. இப்பேச்சுகள் பிரேமதாசா இருப்பின் மட்டுமே சாத்தியம்.

ஈபிஆர்எல்எ:ப்பைப் பொறுத்தவரை, எதிரணியினர் வெற்றி பெற்றால் அதிக வாய்ப்புகள் ஏற்படும். ஆனால் இந்தியப் படைகள் இங்கிருந்தபோது அரசியல் ரீதியாக இந்தியப் படைகளைத் தாங்கள் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அவ்வப் பிரதேசங்களில் உள்ள இந்தியப் படைத் தளபதிகளின் சொல்லைக் கேட்டு நடப்பவர்களாக இருந்ததால் நிலைமையைக் கையாளும் வல்லமை இல்லாமையையும், தமிழ் மக்களுக்கு எதிரான நிலையில் தங்களை ஆதரிக்கும் ராணுவம் நிற்கும்போது அதைமீறிச் செயற்படும் வல்லமை இல்லாமையையும் இவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். பெரும்பாலும் இலங்கை அரசு, ராணுவத்தின் உதவியுடன் இவர்கள் முன்னிலைப்படுத்தப் படுகையில் இலங் அரசையும் ராணுவத்தையும் கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருப்பார்களா அல்லது அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றும் விதத்தில் செயற்படுவார்களா என்பது கேள்வி. வரலாறு அப்படிக் காட்டவில்லை.

இந்தப் பின்னணியில்தான் தமிழர்கள் இந்தப் பிரச்சனையைப் பார்க்க வேண்டும். மற்றப்படி பிரேமதாசாவுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட அதே குற்றச்சாட்டுகளை சிறிமா, லலித்துக்கு எதிராகவும் சுமத்தலாம்.

இரண்டாவது, அமைப்பு ரீதியாக பாராளுமன்ற ஆட்சி முறையிலும் சரி, ஜனாதிபதி ஆட்சி முறையிலும்சரி தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் கிட்டவில்லை. இந்த நிலையில் தற்போதைய பிரச்சனையை இந்தியாவுடன் ஒத்துப்போகும் ஒரு அணிக்கும், இந்திய எதிர்ப்பு அணிக்கும் உள்ள பிரச்சனையாகவே பார்க்கலாம்.

அடுத்தது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கிலோ வெளியிலோ தேர்தல் தொடர்பாக முடிவு எடுக்கும் சுதந்திரம் உள்ளதா என்பது ஒரு கேள்வி. பெரும்பாலும் அவ்வாறான சுதந்திரம் இல்லாதபடியால் எமது பதில் ஒரு ஆய்வுரீதியாக இருக்கலாமே தவிர நடைமுறை ரீதியாக இருக்காது■


**சக்தி**

காலாண்டிதழ்.
SAKTHI
POSTBOKS 99
OPPSAL
0619 OSLO 6
NORWAY.




## துப்பாக்கிகளின் தேசம்

திரும்பவும் திரும்பவும்
விமானங்கள் வட்டமிடும்.
தீமுட்டைகளை உமிழ்ந்து
மேற்சென்று மறையும்.

குண்டும் குழியுமாய்
எனது நிலம் பிளந்து
சிதறும்
செந்நீங்க் குளங்களிலே
சதைத்துகள்கள் கரையொதுங்கும்.

தேசம் குரலொடுங்கி
மெல்ல மெல்லச் சாகும்
மக்களோ
காரணங்கள் அறியாராய்
காவாகிக் கொண்டிருப்பர்

இழப்பதற்கு
உயிருமற்றுப் போனபின்னர்
எமது தேசம்
விடுதலை பெறுமென்று
அசரீரிகள் ஒலிக்கும்

அசரீரிகள் சேர்ந்து பின்
ஆட்சி ஒன்று அமைக்கும்
அரசுகட்டில் துப்பாக்கி
ஏறி அமர்ந்திருக்கும்.

போரும் திசையற்று
போராட்டமும் திசையற்றுப்
போனபின்னும் துப்பாக்கி
ஆட்சி செய்யும் நாட்டுக்கு

சுதந்திர ஈழமென்று
அசரீரி குரலெழுப்பும்.

● யுதிஷ்டிரன்

நன்றி: சரிநிகர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* CDகள் *
* வீடியோ பிரதிகள் *

* தமிழ்த் திரைப்படங்களின் 'ஒரிஜினல்' பிரதிகளை நேரடியாக இந்தியா இலிருந்து தருவித்து நோர்வேயில் விற்பனை செய்பவர்கள்

* தமிழ்த் திரைப்படப் பாடல்களை உயர்ந்த தொழினுட்பத்தில் பதிவுசெய்யும் நியுயோர்க் நிறுவனத்தினமிருந்து நேரடியாக CDக்களை இறக்குமதி செய்து விற்பனை செய்பவர்கள்

NORWAY TAMIL VIDEO
GRASTEN VEIEN 7
1157 OSLO-11

மறவாதீர்கள்– தரமான திரைப்படப் பிரதிகட்கும் உயர்தர CDபிரதிகட்கும் நோர்வேயில் ஒரே விற்பனைப் பிரதிநிதிகள்

NORWAY TAMIL VIDEO.

தொலைபேசி இல. 02/ 745685.

எமது நிறுவனம் சட்டரீதியாக வீடியோ, CD பிரதிகளை விற்பனை செய்ய அனுமதி பெற்றது என்பதை நினைவுபடுத்துகிறோம்.



# மூன்றாம் உலகப் போர்...

சோவியத்தில் நிகழும் இழுபறிகள் இன்று சகல தொடர்புச் சாதனங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அதேவேளை நடந்து முடிந்த ஒருதலைப் பட்சமான வளைகுடாப் போர் பற்றி அனேகமானவர்கள் மறந்தே போய் விட்டார்கள். சதாமின் குவைத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து அமெரிக்கா தொடுத்த போரும் 'வெற்றி'யும், முடிந்தபிறகு வளைகுடாவில் நிலை எவ்வாறு இருக்கிறது எனப் பலரும் ஒவ்வொரு விதமான கருத்துத் தெரிவிக்கின்றனர். இது ஒரு வகையான பார்வை எனலாம்.

1. போரைத் தொடர்ந்து ராணுவ ரீதியாக சதாம் பலவீனப் பட்டதைத் தொடர்ந்து கிளர்ந்தெழுந்த எதிர்ப்புகளும் ஜனநாயகப் போராட்டங்களும் சதாமினால் அடக்கப்பட்டன. வல்லரசுகளின் கோபத்தையும் தாக்குதலையும் தாங்கிப் பின்பும் பதவியில் இருக்கும் சர்வாதிகாரி சதாம் ஒருவர்தான் எனலாம்.
2. சதாமை சர்வாதிகாரியாகவும், ஜனநாயக மறுப்பாளராகவும் சித்தரித்த அமெரிக்கா, மற்றும் மேற்குலக நாடுகள், தொடர்புச் சாதனங்கள் போரைத் தொடர்ந்து இன்னமும் ஈராக்கின் அயல் நாடுகளில் சர்வாதிகாரப் போக்கோடு அதே அரசுகள் இருப்பதைப் பற்றி மூச்சு விடவில்லை. இன்றளவும் இந்த அரபு நாடுகள் ஜனநாயகத்துக்கான கதவுகளைத் திறக்கவும் அரசியல் பொருளாதார மாற்றங்களைச் செய்வதற்கும் எந்த சமிக்ஞையையும் காட்டவில்லை.
3. அமெரிக்காவின் செல்லப் பிள்ளையும் ஆக்கிரமிப்பாளனுமான இஸ்ரேல் இன்றளவும் பலஸ்தீனர்களுக்கான தன்னாட்சி உரிமையை மறுத்து வருவதுடன் சமாதானப் பேச்சுகளிலும் முரண்டு பிடிக்கின்றது.
4. பேச்சுவார்த்தைக்கும், சமரசத்துக்கும் தயாரான நிலையில் பலஸ்தீன விடுதலை அமைப்பு தயாராக உள்ளது. வளைகுடாப் போரின்போது ஈராக்குடன் கைகோர்த்த காரணத்தால் அமைப்பின் தலைவர் யசீர் அரபாத் உலக அரங்கில் தனது செல்வாக்கை இழந்துள்ளதோடு தனது அரசியல் வாழ்வுக்கான முடிவையும் தேடிக்கொண்டதாகப் பலரும் கருதுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5. வளைகுடாப் போரின் பின் (சோவியத் மாற்றங்களினதும் துணையோடு) அமெரிக்கா தன்னை உலகின் அதி வல்லமையுள்ள ஏகாதிபத்தியமாக ஆக்கியுள்ளது.

6. இஸ்ரேலின் நடவடிக்கைகளால் அல்லது வேறு காரணங்களால் அமெரிக்காவுடன் அல்லது மேற்குலகுடன் முரண்பட்ட மத்தியகிழக்கு நாடுகள் சில, பன்னாட்டுப் படைகளுடன் தமது படைகளையும் சேர்த்து அனுப்பியதால் அமெரிக்க, மேற்குலக அரசுகளின் 'கடைக்கண் பார்வை'யைப் பெற்றுள்ளன.

7. பாரம்பரியமாக, பிற்போக்கு பழமைவாத அரசுகள் மேற்குடனான தமது உறவை வைத்திருந்தன. இன்று இவை ஓரளவு தம்மைப் பிராந்தியப் படுத்தப்பட்ட முன்னெடுப்புகளுக்கு அர்ப்பணிக்கத் தயாராக உள்ளன. (உதாரணமாக சவூதி அரேபியாவின் இஸ்ரேலுக்கு எதிரான பகிஸ்கரிப்புப் பிரேரணை)

8. பிராந்திய ரீதியாக சிரியாவும் தனது நிலையைப் பலப்படுத்தியுள்ளது. யுத்தத்தில் பன்னாட்டுப் படைகளுடன் ஈடுபட்டதால் இன்று சுயாதீனமான விடயங்களை முன்னெடுக்கக் கூடியதாக உள்ளதுடன் லெபனானில் தளர்த்தியுளளது. இதனால் அமெரிக்காவிடம் புதிய பிராந்திய சமாதானப் பேச்சுகளைத் தொடக்கக் கோரியுள்ளது. இதுவரை சிரியாவின் கோரிக்கைகளை வேறு காரணங்களால் நிராகரித்த அமெரிக்காவும் மேற்குலகமும் இந்த நிலையை மாற்றும் போக்கு உருவாகியுள்ளது.

9. பலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்குள் புதிய வகையான தலைமையைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சதாம் தனது ராணுவ பொருளாதார பலத்தை மீளக் கட்ட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இவை இரண்டும் நிகழாமல் வல்லரசுகள் தொடர்ந்தும் நெருக்கடியை

## தோற்றதில்லை அல்லது கணக்கிலெடு

*கணக்கெடுக்க காலம் கனிந்துள்ளது.*
*நிதானத்தை வலுவாக வரவழைத்துக் கொள்.*
*ஆத்திரமும் ஆவேசமும் மேலோங்கி*
*வஞ்சத்துடன் தூண்டிவிடலாம்*

*எச்சரிக்கையாய் இரு.*
*மீண்டும் அந்த*
*துப்பாக்கிமீது மரணத்தை எழுதிவிடாதே!*

*சோர்வும் சோகமும்*
*மனிதநேசன் மீது*
*திடமாக மாறிவிடும்.*

*கடந்தவற்றை எல்லாம் மறந்துவிட*
*என்றும், எம்மக்கள்*
*கனவுலகில் வாழந்ததில்லை.*

*நினைவுகளை நெஞ்சுக்குள் புதைத்து*
*விரக்தியும் சோகமும் படர.....*
*மௌனமாக ஒரு சமுதாயம்*
*பதுங்குகுழிக்குள் வாழ்கிறதே....*
*எதற்காக?*

*கசக்கிப் பிழியப்பட்டு...*
*குதறி எறியப்பட்டு...*
*துவம்சம் செய்யப்பட்ட எமது தேசத்தில்,*
*எமது கால்களில் வலுவை ஊட்டி*
*சொந்தப் பலத்தில் வாழ,*
*வீச்சும் மூச்சும் கொண்ட மானிடம்*
*வரலாற்றில் என்றும் தோற்றதில்லை.*

வயவைக்குமரன்

ஏற்படுத்துகின்றன. இதனால் சதாம் பதவியை விட்டு விலகினாலும் ஒரு புதிய (மேற்கு சார்பு) சர்வாதிகாரியே பதவி ஏற்கும் நிலை நிலவுகிறது. காரணம், ஈராக்கில் ஜனநாயகம் மலர்ந்தால் அது, பிராந்தியம் முழுவதற்கும் விஸ்தரியும். இதனை ஏனைய அரபு நாடுகள் விரும்பப் போவதில்லை. எனவே சதாம் பதவியில் நீடிக்கக்கூடும்.

ஒரு போரின் பின் நிகழக்கூடிய மாற்றத்தை முழுமையாக உடனடிக் கணிப்பீடுகள் கூறமுடியாது. இதன் பின்னணியில் அந்தந்த நாடுகள், பிராந்திய கலாசார பாரம்பரிய விடயங்கள், ராஜதந்திரங்கள், வல்லரசு அணுகுமுறைகள் என்பன இருக்கும். மத்திய கிழக்குப் பிராந்தியத்தில், உடனடிக் கணிப்பீட்டில் வெற்றி தோல்வி என இரு முகாம்களை நாம் கணிப்பிட முடியும்.

### 'வெற்றி' பெற்றவர்கள்

துருக்கி: மேற்குடனான ராஜதந்திர ஒத்துழைப்பு, உதவிகள் அமெரிக்காவால் உத்தரவாதம் செய்யப் பட்டன.


சிரியா: லெபனானில் தனது ஆதிக்கத்துக்கு அங்கீகாரமும், மேற்கைரோப்பிய நாடுகளின் புரிந்துணர்வுடன் கூடிய கௌரவமும் (?)

எகிப்து: சர்வதேச புகழாரமும், உள்நாட்டில் அரசின் ஆதிக்க நிலைநாட்டலும். கடன்பளு குறைக்கப்பட்டுள்ளது.

குவைத்: நாட்டின் 'சுதந்திரம்' மீட்கப்பட்டது. போரால் நிகழ்ந்த பொருளாதாரச் சேதங்களுக்கு நட்ட ஈட்டு உத்தரவாதம்.

சவுதி அரேபியா: உறுதியான பாதுகாப்புணர்வு.

ஈரான்: நடுநிலை வகித்தமை, ஈரானுக்குப் பெருமளவு மசகெண்ணெய் விற்பனைக்குச் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. இதனால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடிந்தது.




### 'தோல்வி' அடைந்தவர்கள்

ஜோர்டான்: ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையினால் பெருமளவு பாதிப்பு.

ஈராக்: முற்றிலும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. ஐ.நா.வின் (ஆயுதங்கள் பற்றிய) சோதனைகளைச் சகிக்க வேண்டிய நிலை. பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டமை. ராணுவப் பலக்குறைப்பு.

யெமன்: ஏனைய அரபு நாடுகளில் இருந்து ஒரு மில்லியன் (ஈராக் ஆதரவு) தொழிலாளர்கள் வெளியேற்றப் பட்டமையால் வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார வீழ்ச்சி.

பலஸ்தீன விடுதலை இயக்கம்: சர்வதேச அபிமான இழப்பு, அனேக அரபு நாடுகளைப் பகைத்தமையால் வருமான இழப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இப்போதைக்குச் சுகம்தான்

# உலகம் அழியட்டும்

- மாலாவரதன் -




உலகின் பல பாகங்களைச் சேர்ந்த 130 நாடுகளைச் சேர்ந்த மந்திரிமார்கள் அவசரம் அவசரமாகக் கடந்த நவம்பர் மாதம் ஜெனிவாவில் சந்தித்துக் கொண்டனர். என்ன காரணம்? ஏதோ மத்தியகிழக்கு பிரச்சனையையோ அல்லது வேறு முக்கிய அரசியல் பிரச்சனையையோ தீர்க்க என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. என்றாலும் காரணம் மனிதகுல இருப்பு தொடர்பான முக்கிய விடயம் காரணமாகத்தான். இன்று மனித இனத்தை ஆழ்ந்த பயத்தில் தள்ளியுள்ளன, பூமியின் கணிப்பிடமுடியாத திடீர் காலநிலை மாற்றங்கள். உலகின் பல பாகங்களில் வெப்பநிலை அதிகரிப்பு, கடும் மழை, கடல் மட்டம் கட்டுங்கடங்காது உயர்தல் என்பனவே இதன் வெளிப்படையான அறிகுறிகள். இவ்வாறான ஆபத்தான தொடர் மாற்றங்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று இந்த மந்திரிமார்கள் கூடி ஆராய்ந்தனர். உலகில் மனிதனால் முடியாதது என்று ஒன்றுமில்லை (!) என்று நாம் பெருமை கொள்ளலாம். அதுவே இன்று எமது அச்சத்திற்கு முக்கிய காரணமாக உள்ளது. கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட நாளில் இருந்தே மனிதன் பூமியின் உயிர்த் துடிப்பை அழிக்க ஒரு தீர்க்கமான முடிவோடு செயற்படுகிறான். தொழிற்சாலை இயங்கவும், வாகனப் பாவனைக்கும் முக்கியமானவை பெற்றோலியப் பொருட்கள். என்ன, நிலத்தைத் தோண்ட சும்மா வருவதுதானே என்று எரித்துத் தள்ளிவிடலாம் எனப் புறப்பட்டன மேற்கு நாடுகள். இன்று உலகம் முழுவதும் அளவிட முடியாத பெற்றோலியப் பொருட்கள் தினமும் எரிக்கப்படுகின்றன. இவர்கள் கண்ணை மூடிக்கொண்டு தாராளமாய் பெற்றோலியத்தை எரிப்பது பற்றி யார் கவலைப் பட்டார்கள். கவலையின் ஆரம்பமே இவ்வாறு எரிகையில் வெளியாகும் காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயுதான்.

$CO_2$ வாயு வளிமண்டலத்தில் படைபடையாகப் படிய ஆரம்பித்து



படையின் தடிப்பு நாளந்தம் பெரிதாகி வருகிறது. பிரச்சனை என்னவென்றால் $CO_2$ வாயு பூமியின் சமநிலையைப் பாதிப்பதுதான். சூரிய ஒளியால் பூமிக்கு கணிசமான வெப்பம் கிடைக்கிறது. ஒரு பகுதி மீண்டும் தெறிப்படைந்து வெளியேறிவிடுகிறது. $CO_2$ வாயு படையின் உருவாக்கத்தினால் இவ்வாறு வெளியேறும் பகுதி மீண்டும் பூமிக்குள் விடப்படுகிறது. இதனால் பூமியின் வெப்பநிலை மேலும் அதிகரிக்கிறது. இது இவ்வாறு தொடருமேயெனில் பூமியின் வெப்பநிலை கட்டுக்கடங்காது கூடிவிடும். இதனால் வரண்டபூமி மேலும் வரட்சி அடையும், துருவத்துப் பனிஉருகி கடல் மட்டம் மேலும் உயரும். இதனால் ஒல்லாந்து, மாலைதீவு, பங்களாதேஷ் போன்ற நாடுகள் கடலினுள் மூழ்கிவிடும் அபாயம் உண்டு. ஜெனீவாவில் கூடிய மந்திரிகள் எப்படி இந்த காபனீரொட்சைட்டு வெளியேற்றத்தை 2005ம் ஆண்டுக்குள் 20%ஆல் குறைப்பது என்று ஆராய்ந்தார்கள்.

கடந்த ஒகஸ்ட் மாதம் சுவீடன் நாட்டில் சந்தித்த 700 விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் எதிர்வரும் காலத்தின் அபாயங்கள் பற்றி அறிக்கை ஒன்றில் எச்சரித்திருந்தனர். இந்த அறிக்கை கொண்டிருந்த முக்கிய அம்சங்கள் இவை.

* $CO_2$ போன்ற வாயுக்களின் உருவாக்கத்தை முற்றாகக் கட்டுப்படுத்தாவிடில் அடுத்து வரும் நூற்றாண்டுகளில் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும்.

* ஆய்வு பூரணமான உடன்பாடுகளை உடன் காணவேண்டும். தொடரும் மோசமான நிலையால் எதிர்வரும் நூற்றாண்டில் பூமியின் வெப்பநிலை இரண்டு முதல் ஐந்து பாகை வரை அதிகரிக்கும். ஆனால் இவ்வாறான நிலை கடந்த பத்தாயிரம் ஆண்டுகளில் ஏற்படவில்லை.

அடுத்த நூற்றாண்டில் கடல் மட்டம்


● புதிய பூமி
26/74, வைத்திய வீதி
தெஹிவளை,
இலங்கை

● Aanaa Aavannaa Ienaa
Post bus 85326
3508 AH Utrecht
The Netherlands


சராசரி 65சென்ரி மீற்றர் வரை உயர வாய்ப்புண்டு. இந்த சராசரி அளவை விட 35 சென்ரி மீற்றர் கூடவோ குறையவோ இருக்க வாய்ப்புண்டு.

* காபனீரொட்சைட்டு ($CO_2$) போன்ற வாயுக்களின் அளவைக் கட்டுப்படுத்த சில வழிமுறைகள் கையாளப்படுகின்றன. ஆனால் இந்த வழிமுறைகள் இவ்வாறான வாயுக்களின் அளவைக் கூட்டியுள்ளன.

* இவ்வாறான வாயுக்களின் வெளியேற்றத்துக்கு சில முக்கிய துறைகளே காரணம் எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இவை தவிர வேறு காரணங்களும் இருக்கலாம். அவை கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

* இவ்வாறான வாயுக்களின் வெளியேற்றத்துக்கு 'வளர்ந்த' நாடுகளே 75% பொறுப்பாக இருக்கின்றன. ஆனால் வெப்பநிலை உயர்வால் உடனடியாக மோசமான பாதிப்புக்கு ஆளாகப் போவது வறிய வளர்முக நாடுகள்தான். ஆகவே வசதி படைத்த நாடுகள் இது பற்றி உடன் அக்கறை செலுத்தவேண்டும். காலநிலை மாற்றங்களினால் பாதிப்பிற்கு ஆளாகப்போவது பூமியின் இயற்கை நீரோட்டமாகும். இந்த மாற்றங்களால் வெள்ள அபாயமும் வரட்சியும் கட்டுங்கடங்காததாக இருக்கும். இந்த நிலைகளினால் உலகில் உணவு உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டு பஞ்சம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இனம்காணல்

• பவானி

அந்தக் கடிதத்தைப் படித்தபோது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அது ஒரு கீழ்த்தரமான காதல் கடிதம்.

"The way you talk, walk, smile set me on fire" என்பது போல வசனங்கள் நிறைந்த கடிதம்.

பெண்களைக் கண்டதும் dating கேட்கும் இந்த ஊரில், கலியாணம் என்பதற்கும் Sex என்பதற்கும் வித்தியாசம் தெரியாத இந்த ஊரில் ஒருவன் காதல் கடிதம் எழுதுவதென்றால் -

"எனக்கு ஒரு sum இல் problem ஒன்று திருத்தித் தருவீர்களா?" எனக் கேட்டு love letter தருவதென்றால் -

அது ஆச்சரியப்படத்தக்க ஒரு விஷயம்தான்.

அவன் இந்த முறையில் அணுவதற்கு என்ன காரணம்?

ஒருவேளை datingற்கு ஒப்புக் கொள்ளும் பெண்கள் நிறைந்த இச்சமுதாயத்தில் dating கேட்டு அலுத்து, எங்களூரில் நடைபெறுவதைப் போல்,

ஒருகிழமை பின்னால் திரிந்து, பெண்ணின் முகத்தில் பரிதாபம் தோன்றவைத்து, பிறகு மெதுவாக பொதுவான விஷயங்களைக் கதைத்து, அதற்குப் பிறகு 'நீ இல்லாவிட்டால் நான் இல்லை' என்பது போல் கடிதம் எழுதிக் கொடுத்து விழுத்தும் அணுகுமுறையைக் கேட்டோ, படித்தோ தெரிந்துகொண்டு, அதற்கான தாகத்தில் திரிந்தவனுக்கு சரியான ஆள் கிடைத்து விட்டதாக நினைத்து இக்கடிதத்தைத் தந்திருக்கலாம்.

ஆனால் அந்தக் கடிதத்தில் இருந்தது காமமே தவிர காதல் இல்லை. அப்படியானால் நான் இங்குள்ள சக மாணவர்களோடு பழகிய விதம் இதைவிட வேறு வழியால் என்னை அணுக முடியாது என்ற எண்ணத்தை இவர்களிடம் உண்டாக்கியதோ?

நான் இவர்களுக்கு என்னைக் கடினமானவளாகக் காட்டிக் கொள்ளவேண்டிய நிகழ்ச்சி ஞாபகத்துக்கு வந்தது.




ஊரிலிருந்து நான் ஆபிரிக்காவுக்கு அப்பாவிடம் அம்மா, சகோதரிகளைக் கூட்டிச் செல்லப் போகிறேன் என்று தெரிந்ததும் தோழிகள் "ஏதோ இஞ்சை boysஆலை வந்த பிரச்சனைகளை முறைச்சுப் பார்த்தே சமாளிச்சிட்டாய். ஆனால் இப்ப காப்பிலிகளிட்டைப் போறாய். ஏதோ போனமாதிரித் திரும்பி வந்தாச் சரிதான்' என்று கேலியுடனும், பயத்துடனும் சொன்னார்கள். அப்பொழுதெல்லாம் என்னை அசைக்க ஒருத்தன் பிறந்துதான் வரவேண்டும் என்பதுபோல சிரித்துவிட்டுத்தான் புறப்பட்டேன்.

ஆனால் விமான நிலையத்தில் அம்மா விசா எடுக்கப் போனபோது அங்குள்ளவன் வேண்டுமென்றே ஒரு பிரச்சனையைக் கிளப்பி நான் கதைக்கப் போக "ஓ உன்னுடையதா? உனக்காகத்தான் விசா தருகிறேன்" என்று தந்தபோது, கடவுளே இங்கு எப்படித்தான் சீவிக்கப் போகிறேனோ என்று மலைப்புத்தான் இருந்தது.

இதை அப்பாவிடம் சொல்லி "நான் இங்கு படிப்பை விட்டு இந்தியாவுக்குப் போகப் போகிறேன்" என்று கேட்டபோது, "இப்படிப் பட்டவர்களுக்கு ஒளித்து எவ்வளவு காலம் சீவிக்கப் போகிறாய்? இப்படியான பிரச்சனைகளைத் தீர்க்கேக்கைதான் உனக்குத் தன்னம்பிக்கை வரும். நீ இஞ்சை படிக்கிறதுதான் நல்லது" என்றார். பிறகு அவர் அதிபரிடம் போய் எனக்காகக் கதைத்திருக்க வேண்டும். அது மறுநாள் வகுப்பில்தான் எனக்குத் தெரிந்தது.

அடுத்தநாள் காலையில் எங்கள் வகுப்பிற்கு வந்த அதிபர் "உமக்கு வகுப்பில் ஏதாவது அசௌகரியங்கள் இருந்தால் நீர் நேரே என்னிடம் வரலாம்" என்று கூறிவிட்டு மற்றைய மாணவர்களிடம் "பிறநாட்டுக்காரர்களின் பண்பாடுகளை மதிப்பதற்கு எங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்" என்று நாசுக்காகக் கூறியபோது அவர்கள் என்னைக் கேள்விக்குறியுடன் பார்ப்பதை உணர முடிந்தது.

அதிபரின் இந்த அறிவுரையால் நான் தனியான ஓர் இருக்கையில் அமரும்போது, அவர்களிடம் இருந்து ஒரு எதிர்ப்பும் கிளம்பவில்லை. ஆனால் அன்றைய இடைவேளையில் ஒருவன் என்னிடம் வந்து "நீங்கள் வெள்ளையர்கள் இருக்கும் ஒரு வகுப்பறைக்குள் போனாலும் இப்படி ஒதுங்கித்தான் இருப்பீர்களா?" என்று கேட்டபோது அவர்களின் தாழ்வு மனப்பான்மையை என்னால் உணர முடிந்தது.

எனட நடத்தை இவ்வளவு தூரம் அவர்களைப் பாதித்தது மனதுக்குச் சற்று வருத்தமாகத்தான் இருந்தது. அதற்குச் சமாதானமாக ஏதேனும் கூறவேண்டும் போல இருந்ததால் எங்கள் பண்பாடு, நாங்கள் பிற ஆண்களுடன் பழகும் முறை கல்யாணத்துக்கு நாங்கள் கொடுக்கும் முக்கியத்துவம் இவை பற்றியெல்லாம் விளக்க பத்து நிமிஷத்துக்கு மேலாகத் தேவைப்பட்டது.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்ட அவன் "அப்படியானால் நீ இன்னும் ஒருவனாலும் முத்தமிடப்படக்கூட இல்லையா?" எனக் கேட்ட விதம் 'ஐயோ பாவம் நீ பிறந்தும் என்னத்தைக் கண்டாய்?' எனப் பரிதாபப்படுவது கேட்பது போல இருந்தது.

'அட இவ்வளவு கஷ்டப்பட்டு நான் இவனுக்கு என்னை இந்த அளவுக்குத்தான் புரியவைத்திருக்கிறேனா?' என சுயபரிதாபத்துடன் நான் பதில் சொல்லத் தெரியாமல் அவனைப் பார்க்க அவன் யோசனையுடன் அகன்றுவிட்டான்.

அவன் அப்பால் சென்றதும், எனக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பக்கத்திலிருந்தவள் 'எனக்குத் தெரியும் நீ எதற்காகக் கன்னியென்று உன்னைக் கூறிக்கொண்டாய் என்று, ஏனெனில் உனக்கு First dating என்பதால் நிறையக் காசு கிடைக்கும் என்றுதானே' என்று தான் கேட்டவற்றை நம்ப முடியாமலோ அல்லது நம்ப விரும்பாமலோ என்னைக் கேட்டபோது இவளிற்கு என்ன பதில் சொல்வது என்ற திகைப்புத்தான் எனக்கு ஏற்பட்டது. அப்போது பதில் சொல்லும் சிரமத்தை வைக்காமல் ஆசிரியர் வந்தாலும் இதைவிட கேவலமான ஒரு கேள்விக்கு பதில் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் அடுத்தநாளே வந்தது.

நேரசூசிகை தருகிறார்கள் என்றதால் அடுத்தநாள் பாடசாலை விட்டபின்பும் வகுப்பறையில் நிற்கவேண்டி வந்தது. ஆசிரியர் நேரசூசிகையை மாட்டிவிட்டு வெளியே போனபின் அதைப் பார்த்து நாங்கள் ஐந்தாறு பேர் எழுதிக் கொண்டிருக்க, மற்றவர்கள் ஏதோ தமக்குச் சம்பந்தமில்லஏத விடயம் வகுப்பில் நடப்பதைப் போல தங்கள் அலுவல்களைக் கவனித்தவாறு இருந்தனர்.

நான் நேரசூசிகையை எழுதியபடி இருந்தேன். அப்போது எங்களால் Proff என்று அழைக்கப் படுபவன் (தானே இந்த உலகில் அதிமேதாவி என்று எண்ணிச் செயற்படுவதால் அவனிற்கு இப்பெயர் பாடசாலையில் உள்ள எல்லோராலும் ஏகமனதாகச் சூட்டப்பட்டது) தனது 'சரத்பாபு specks' ஐச் சரிசெய்தவாறு ஒரு கதிரையை எடுத்துவந்து என்னருகில் போட்டுவிட்டு 'May I sit here' என்று கேட்டான். நான் நிமிர்ந்து அவனைப் பார்த்து தலை அசைத்துவிட்டு எனது வேலையைத் தொடர்ந்தேன்.

"நான் உங்களைக் குழப்புவதற்கு மன்னிக்க வேண்டும். நாளை சனிக்கிழமைதானே. நீங்கள் ஒய்வாக இருப்பீர்கள்தானே?" என்றான், நாளைக்கு ஒய்வாக இருப்பேன் என நினைத்து, இவன் எதற்காகக் கேட்கிறான் என்று புரியாமல் கண்களில் கேள்விக்குறி தொக்கிநிற்க "ஆம்" என்றேன்.

அவனி "அப்படியானால் இரவு ஏழரை மணிக்கு என்னைச் சாப்பாட்டு மேசையில் சந்திக்க முடியுமா?" என்று கேட்டபின்பும் ஒரு நிமிடம் சென்றது, இவன்எதற்காக வரச் சொல்கிறான் என்பது புரிய.

எனக்குள் மூண்டெழுந்த கோபம் கண்களில் தெரிய நான் நிமிர்ந்தபோது அவன் பயந்து விட்டான். ஆனால் அவன் முகத்தில் பயத்தை மீறி ஆச்சரியம் தோன்றியதைக் கவனித்த பிறகுதான் இவனைக் கோபித்துப் பயனில்லை என்று எனக்குப் புரிந்தது. வந்த கோபத்தை ஒரு நிமிடம் கண்ணைமூடி அமுக்கிவிட்டு "இதேகேள்வியை எனது ஊரைச் சேர்ந்த வன் கேட்டிருந்தால் நான் கொலைகாரியாயிருப்பேன். உங்களுக்கு என்னை விளங்கவில்லை என்பதால் பறவாயில்லை.. ஆனால் இனிமேல் இப்படிப்பட்ட கதையுடனோ எண்ணத்துடனோ அணுகவேண்டாம்" என்று தன்மையாக ஆனால் அழுத்திச் சொன்னபோது அவன் மன்னிப்புக் கேட்டுவிட்டுப் போய்விட்டான்.

** உலகில் ஒவ்வொருநாளும் 5வயதுக்குட்பட்ட 40,000 சிறுவர்கள் இறக்கின்றனர். இத்தொகையில் 99%இனர் மூன்றாம் உலகநாடுகளிலேயே பலியாகின்றனர்.*

ஆனால் இந்தக் கதை அவர்களின் விடுதி முழுவதிலும் பரவியிருக்கிறது என்று அடுத்தநாள் sexual education classஇல் தெரிந்தது.

அடுத்தநாள் ஆசிரியர் வந்ததும் வராததுமாகவே ஒருவன் எழுந்து "சில



பெண்கள் ஆண்களை விட்டு விலகியே வாழ்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அவர்களின் உடலில் ஏதாவது குறைபாடா?" என்று கேட்டபோது அவன் எனக்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறான் என்பது புரிந்தும் முகத்தில் எந்தவித பாவத்தையும் காட்டாமலிருக்க நான் நிரம்ப பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. ஆசிரியர்க்கும் அவர்கள் என்னைத்தான் mean பண்ணுகிறார்கள் என்று புரிந்திருக்க வேண்டும். "சில பெண்கள் அப்படியிருப்பதற்குக் குறைபாடு காரணமாக இருக்கலாம். ஆனால் சிலர் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாமல் இருக்க சிறுவயதில் இருந்தே பழக்கப்படுத்தப் பட்டுவிடுகிறார்கள்" என்று கூறியபோது, நான் கடுமையைத் தவிர வேறு உணர்ச்சியே முகத்தில் காட்டாமல் அமர்ந்திருந்தேன். அந்த முகபாவத்தை இதுவரை மாற்றவேயில்லை.

அந்தக் கடுமை கொண்ட முகமே இன்றும் உள்ளது. அதனையும் மீறி ஒருவன் love letter தருகிறான். இதுவெல்லாம் என்ன? எங்காவது வெளிக்கிட்டு ஒடுவமோ என்ற எண்ணம்தான் மேலோங்குகிறது.

இப்ப இவனை என்ன செய்யுறது? என்று யோசித்த என்னை "என்ன யோசனை" என்று அப்பா கேட்டார். "ஒன்றுமில்லை. அவனொருவன் Maths problem ஒன்று solve பண்ண என்று தந்தான். பார்த்தால் love letter" என்றவாறு அந்தக் கடிதத்தை அவரிடம் நீட்டினேன். நிதானமாக வந்து கதிரையில் இருந்த அவர்,

"Grammerல் ஒரு பிழையும் இல்லை" என்று தனது தொழிலின் தன்மையைக் காட்டினார். வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு "இதைத் திருத்துவதற்குத் தரவில்லை, என்ன செய்யுறதெண்டு கேட்கத்தான் தந்தனான்" என்றேன்.

"உனக்கு வந்த பிரச்சனைகளைத் தீர்ப்பது உன் கெட்டித்தனம்" என்றவாறு கதிரையில் இருந்து எழுந்த அவரை "Registrar Officeஇல் சாட்சிக் கையெழுத்துப் போட இன்னும் ஒருவர் வேணும். அதுதான் உங்களிட்டை வந்தனான்" என்ற எனது பதில் நிறுத்தியது. எனது குரலில் இருந்த கோபத்தையும் அவர் புரிந்திருக்கவேண்டும்.

"மகள், நான் உனக்கு இப்பவும் திரும்பச் சொல்றது ஒன்றுதான். எந்த ஒரு ஆணிற்கும் ஒரு பெண்ணை propose பண்ண உரிமை இருக்கு. அதே உரிமை அவனை மறுப்பதற்கும் அவளுக்கு இருக்கு. அவனை ignore பண்ணினாப் பிறகும் பிரச்சனை தந்தால் என்னட்டைச் சொல்லு" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

அப்பாவின் சிறப்பே இதுதான். என்னில் நம்பிக்கை வைத்து என்னை எனது ஆளுமைக்கேற்ப வளர்த்திருக்கிறார். ஆனால் எந்த எல்லை வரை என்னால் தனியச் செயற்பட முடியும் என்ற எல்லையும் அவருக்கு நன்றாகவே தெரியும்.

இதுபோன்ற ஒரு பிரச்சனை ஊரில் இருக்கும்போதும் வந்தது. அப்பொழுது எனக்கு பதினான்கு வயதிருக்கும். நான் அப்பாவிடம் வந்து "அப்பா எனக்குப் பின்னாலை ஒருத்தன் திரியிறான் போலை" என்று சொன்னேன். இதைப் பாதிப் பயத்துடனும் பாதி சந்தோசத்துடனும்தான் சொன்னேன். சந்தோசமாகத்தான் இருக்க வேண்டும். நானும் ஒரு பெரிய ஆள் என்ற மாதிரி, எனக்குப் பின்னாலும் ஒருவன் திரிந்தால் அந்த வயதில் சந்தோசம் வரத்தானே செய்யும்.

நான் சொன்ன பிற்பாடு 'ஓ நீயும் வளர்ந்துவிட்டாயா?' என்பது மாதிரி பார்த்த அப்பா என்னைத் தனக்குப் பக்கத்தில் இருத்திவிட்டு கூறிய புத்திமதி எனக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்னமும் ஞாபகம் இருக்கிறது. "இந்த வயதில் வரும் love என்பது மனதில் வரும் சின்னச் சலனம். அதற்கு முக்கியத்துவம் கொடுத்தால், அது பெரிதான உலகிலேயே முக்கியமான விடயமாகப் படும். உனக்கு matuarity வந்தபிறகு நீ ஒருவனை விரும்பினால் அது சத்தியமானதாக, விசுவாசமிக்க காதலாக வாழும். அது நிச்சயமாக எங்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியதே" என்று அப்பா சொன்னபோது அதுதான் வேதவாக்கு என்றிருந்த என்மனதில் அது ஆழமாகப் பதிந்துவிட்டது என்பதுதான் உண்மை.

அதன்பிறகு அவனைக் கண்டதும் காணாதமாதிரிப் போய், முகத்திலே வெறுப்பைக் காட்டி, ....... ஆனால் அதிகநாள் என்னை அப்படி அவஸ்தைப்பட அப்பா விடவில்லை. அவரின் சம்பளம் சாப்பாட்டிற்கே அளவாக இருந்த அந்த நாளிலும்கூட schoolக்கு காரில் போய்வர ஏற்பாடு செய்துவிட்டார்.

ஆனால் இதே பிரச்சனையை அம்மாவிடம் சொல்லியிருந்தால் என்நிலை வேறாக இருந்திருக்கும்.

"நீ பார்த்த படியால்தானே அவன் உன்னைப் பார்த்தது உனக்குத் தெரிந்தது.நீ பொம்பிளைப் பிள்ளையாய் அடக்க ஒடுக்கமாய்த் திரிஞ்சால் அவன் ஏன் பின்னாலை வாறான்?" எனப் பிரச்சனையைப் பெரிதுபடுத்தி அந்த வயதில் எனக்குப் புரியாத விஷயங்களை விளக்கி, என்னை பதினைந்து வயதுக்குள் யாருடனாவது ஓடவைத்திருப்பாள். நல்லவேளையாக பதினெட்டு வயதுவரையும் ஒழுங்காக வாழ உதவி புரிந்த அப்பா பிறகு உழைப்பதற்காக இங்கு வரும்போதுகூட என்னைக் கூப்பிட்டு "இவ்வளவு காலமும் உனக்கு வந்த பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது எண்டு நான் Guide பண்ணினன். இனியும் உனக்கு ஏதேனும் பிரச்சனை வந்தால் நீ solve பண்ணுவாய் எண்ட நம்பிக்கை எனக்கு இருக்கு" என்று சொல்லிவிட்டுத்தான் இங்கு வந்தார்.

### உலக மாநாடு

யூலை மாதக் கடைசி வாரத்தில் ஒஸ்லோ பல்கலைக் கழகத்தில் உலக மனித உரிமை மாநாடு நடைபெற்றது.

ரஞ்சன்

அவரது நம்பிக்கை வீண்போகக் கூடாது என்ற எண்ணத்தில் இதுவரை என்னை அணுகியவர்களின் அணுகுமுறைகள் பலவாக இருந்தாலும் அவற்றை ஒதுக்கித்தள்ளி நான் வெற்றி(?) கண்டபோதிலும் ஒவ்வொரு பிரச்சனையைத் தீர்க்கும்போதும், தீர்த்தபின்பும் இன்னொரு மனத்தை வேதனைப் படுத்துகிறேனோ எனும் எண்ணத்தில் என் மனம் படும் பாடு எனக்கல்லவோ தெரியும். அதில் ஒருவனாவது என்மீதில் விசுவாசமிக்க காதலில் வந்தானா என்பது வேறு விஷயம். எனது பணத்திற்காக; அல்லது கொஞ்சநாள் பொழுதைச் சந்தோஷமாய் போக்குவதற்காக; இதை விழுத்துவது கஷ்டம் என்று மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு, நான் இவளை விழுத்திக் காட்டுறன் என்ற கதாநாயக சவால்தனத்தில் வெற்றி காணவேண்டும் என்பதற்காக என்னை அணுகியிருக்கலாம்.

ஆனால் என்னை அணுகமுடியாமல், என் பக்கத்தில் இருந்து அவர்களின் அடுத்த அடியை எடுப்பதற்குச் சாதகமான ஒரு பிடியும் கிடையாதபோது, முகத்தில் சோகத்தைப் பூசி, ஐந்தாறு நாள் சவரம் செய்யாத முகத்துடன் வந்து தங்களின் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகிக்கும்போது, என்னால் இவனுக்கு ஏன் வீண் மனக்கஷ்டம் என்று எண்ணி இனி என்னை யாரும் பார்க்காத மாதிரிப் போகவேண்டும் என்ற எண்ணத்தில் பழைய சட்டைகளைப் போட்டு, தலை இழுப்பதில்அக்கறை இல்லாமல், குறிப்பாக அந்த 'ஒருத்தனை' மயக்கக்கூடிய இரட்டைப் பின்னலை அல்லது குதிரைவால் முடியைத் தவிர்த்து பவுடர் பூசாமல் எவ்வளவுக்கு என்னை வருத்தியிருக்கிறேன் என்பது எனக்கு மட்டும்தான் தெரியும்.



ஆனால் இதில் ஒருத்தனைக்கூட என்னால் ஏன் காதலிக்க முடியவில்லை? இது சங்கடத்துக்குரிய கேள்வியே. இது அடிக்கடி எனக்குள் எழுகிறது. இதன் பதில்பற்றி கொஞ்சம் யோசிக்க வேண்டித்தான் உள்ளது.

ஒருவேளை என் statusற்கு ஏற்ற ஒருவனை நான் இன்னும் சந்திக்கவில்லையா? ஒருவனுக்கு எனக்கேற்ற status இருக்கிறதென்று தெரிந்து நான் அவனைக் காதலித்தால் அதுதான் காதலோ?

என் மனதின் மென்மையான முனையைத் தொட ஒருவனுக்கும் தெரியவில்லையா? அல்லது தைரியமில்லையா?

எனக்கு அறிவு வந்தபிற்பாடு நான் கண்ட ஆண்கள், அவர்கள் காதல் கல்யாணம், அவற்றின் போலித்தனம் இதனால் எனக்கு ஆண்களில் ஏற்பட்ட வெறுப்பா காரணம்?

வெறுமனே sex என்பதுதான் ஆண்கள் பெண்களைத் தேடுவதன் உட்பொருள் என்கிற யதார்த்தம்தானா?

சிலவேளை அப்பாவில் உள்ள பாசத்தை உடைத்தெறிந்தால், உடைக்கிற வல்லமை எனக்கில்லை என்கிற மனக்கசப்பா? அப்படியென்றால் பாசத்தை உடைத்தெறியும் வல்லமை இந்தக் காதலிற்கு இல்லையா?

### நோர்வேயின் திரைவீழ்ச்சி

நோர்வேயில் திரையரங்குகளில் காட்டப்படும் படங்களின் எண்ணிக்கை வரவரக் குறைந்து வருகிறது. கடந்த வருடம் 181 படங்கள் வினியோகிக்கப் பட்டன. ஐந்து வருடங்களின் முன்னர் 300ஆக இருந்த இத் தொகை 1961ல் 428ஆக இருந்தது குறிப்பிடத் தக்கது.

– திரைப்பித்தன் –

காதலிக்கும் தன்னம்பிக்கை எனக்கில்லை என்பதுதான் முக்கிய காரணமோ?

எதுவோ விசுவாசம் மிக்க காதலிற்கான தாகம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதன் பரிசுத்தமான அன்பிற்கு ஏக்கமாய் இருக்கிறது. இதுதான் மீராபாய்க்கும் ஆண்டாளுக்கும் சபிக்கப்பட்டதோ? அதனால்தான் அவர்கள் இறைவனிடம் தங்கள் காதலைச் சிபார்சு செய்தார்களோ? ஒரு proposal marriageஇல் வெறுமனே புறவாழ்க்கைக்கான தீனி கிடைக்கும், அவ்வளவே. இத்தாகம் தணிக்கப்படாது.

நான் இன்னும் ஒருவனையும் சரியாக இனங்காணவில்லை; அல்லது அவனை மற்றவர்களிடம் இருந்து பிரித்துப் பார்க்கவில்லை, அல்லது காதல் என்பது கானல் நீராக இருக்கலாம்.

இதுவெல்லாம் மற்றவர்களுக்குப் புரிவதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் சாப்பிட்டு, சட்டை உடுத்து, வேலைக்குப் போய் அல்லது படித்து வெறுமனே திரிவதாகத்தான் எனக்குப் படுகிறது.

இது உனக்குப் புரிகிறதா?

நன்றி: புதுசு'9, யூலை1984'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஆயிரம் பூக்கள் மலரட்டும்

## தேவையா இந்தியா?

— பொ.க.இரத்தினம்

நடந்து முடிந்த (?) வளைகுடாப் போர், போர் என்று சொல்லப் பட்டாலும் உண்மையில் ஈராக்கிற்கு அதாவது சதாம் ஹுசைனுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட தயாரிப்பே வளைகுடாப் போர். பலரும் கருதுவது போல இந்த யுத்தம் குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததால் ஏற்படவில்லை. ஆனால் அதற்குப் பின்னால் இருந்த பல காரணிகள் மறைக்கப்பட்டதில் 'சதாம் என்ற சர்வாதிகாரி'யின் யுத்தமாகவே இது கருதப்படுகிறது.

உண்மையில் ஈராக் அதிபர் சதாம் ஏகாதிபத்தியத்தின் பழைய அடிவருடி. அந்தப் பிரதேச நலன்களை அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் பங்குபோடவும் விரோதிகளை அடிபணிய வைக்கவும், செய் என்றால் செய்யத்தக்க செல்லப்பிள்ளையாக எழுபதுகளில் இருந்து எண்பதுகள் வரை இருந்தவர். அந்தக் காலகட்டத்தில் அமெரிக்க சுரண்டல் மற்றும் அமெரிக்க நலன்களுக்கு எதிராக ஈரானில் ஷாவின் அரசு வீழ்த்தப்பட்டுப் பதவிக்கு வந்த மதவாத நிலப்பிரபுக்களின் தலைமை ஏகாதிபத்தியங்களைப் பயமுறவைத்தது. இதனால் தமது கைப்பிள்ளை சதாம் மூலம் ஈராக் - ஈரான் போரைத் தூண்டிவிட்டு ஈரானைப் பணியவைக்க முற்பட்டன. இந்தப் போர் அப்போது சதாமினால் எல்லைத் தகராறாகவே ஆரம்பிக்கப்பட்டது. (இன்று குவைத்தின் எண்ணைக் களவு என்று சதாம் தொடங்கினான்) அப்போதெல்லாம் ஏகாதிபத்தியங்கள் 'ஆஹா ஓஹோ' என்று குதிக்கவில்லை. மௌனமாக ரசித்திருந்தன. அத்தோடு ஏராளமான ஆயுத உதவியும் வழங்கின. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய ஈராக் தனது ராணுவத்தைப் பிராந்தியத்திலேயே பெரிய படையாகக் கட்டியது. பல ஆண்டுகள் போர் நிகழ்ந்து முடிவுக்கு வந்தபோது ஈராக் ஒரு பிராந்திய வல்லரசாக வளர்ந்துவிட்டதை ஏகாதிபத்தியங்கள் உணர்ந்தன. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக முடிந்த கதையாக இது நிகழ்ந்துவிட்டது. இதைவிட ஈராக் தன்னை மேலும் வளர்க்க இரசாயன ஆயுதங்களையும் உற்பத்தி செய்தது.

இன்றைய உலக அமைப்பு முறையில், சில ஏகாதிபத்தியங்களின் பிடியில் பல நாடுகள் அரசியல், பொருளாதார, ராணுவ ரீதியில் சிக்குண்டுள்ளன. பிராந்திய வல்லரசுகளின் வளர்ச்சி, இவ்வாறான தற்போதைய அமைப்பைத் தகர்ப்பதன் மூலம் ஏகாதிபத்தியங்களின் பலத்தைக் குறைக்க முடியும். எனவே ஈராக்கின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள இயலாத அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் திட்டமிட்டு ஈராக்கைப் பலமிழக்கச் செய்யும் நடவடிக்கையில் இறங்கின. முதலில் தொடர்புச் சாதனங்கள் மூலம், ஏகாதிபத்திய நலன் சார்ந்து சதாம் 'பயங்கர ஆசாமி' என்பதாய்க் கதை கட்டின. இதன் பின்பே சதாம் ஆக்கிரமிப்பு ஆசையோடு குவைத் போனதும் அதைத் தொடர்ந்து வளைகுடாப் போரும்... அதன் திருகுதாளங்களும், திடீரென ஐ.நா.சபை முக்கியம் பெற்றதும், ரஷ்ய சீன ஏகாதிபத்தியங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் 'ஜால்ரா' போட்டதும் பழைய செய்திகள்.

இங்கு நான் சொல்ல வந்தது என்னவென்றால் அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும், ஈராக் குவைத்தை ஆக்கிரமித்திருந்தால் என்ன, ஆக்கிரமிக்காமல் இருந்தால் என்ன ஈராக்கின் பலத்தை அடித்து நொருக்குவதையே குறியாகக் கொண்டிருந்தன, கடந்த சில வருடங்களாகவே இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வந்தன என்பதுதான். இதில் இருந்து நாம் சில படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த ஏகாதிபத்திய அரசியல், பொருளாதாரச் சக்கரத்தில் மூன்றாம் உலக நாடுகள் தொடர்ந்து வறுமையில் வாட, அபிவிருத்தி அடைந்த நாடுகள்தான் மேலும் செல்வம் பெருக்கி அபிவிருத்தி அடையும். எனவே ஒரு மூன்றாம் உலக நாடு பொருளாதார, அரசியல், ராணுவ ரீதியில் வளர்வதை 'பணக்கார நாடுகள்' ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. எனவே மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் தவிர்க்க முடியாதது. இதனைத் தமது தளத்தில் பல மூன்றாம் உலக நாடுகள் முன்னெடுத்தன. ஆனால் நீண்ட காலப்

---

நோர்வேயில் இந்த வருட முடிவுக்குள் 2,500 முதல் 3,000 வரையிலான பெண்கள் பாலியற் பலாத்காரத்துக்கு உட்படுத்தப் படுவார்கள் எனக் கணிப்பு ஒன்று கூறுகிறது. இதில் கால்பங்கினர் தமது கணவர்மாரால் இவ்வாறு பாதிக்கப் படுவர் எனக் கூறப்படுகிறது. இதில் பெரும்பகுதி முறைப்பாடுகளுக்கு வருவதில்லை எனவும் இந்தக் கணிப்பு கூறுகிறது. 5முதல் 10% வரையிலானோரே இதுபற்றிய முறைப்பாடுகள் செய்கின்றனர் எனத் தெரிகிறது.

சுவீடன் நாட்டில்வருடம் ஒன்றிற்கு 10,000 பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் பிரயோகிக்கப் படுவதாகக் கணிப்பிடப் பட்டுள்ளது. இதில் மூன்று வீதமானோரே முறைப்பாடு செய்வதாக அறியப்படுகிறது.

யாமினி

---

www.tamilarangam.net




போக்கில் இவை மீண்டும் ஏகாதிபத்திய வலைக்குள் சிக்குண்பதை அல்லது தம்மை உறுதியாகக் கட்டியெழுப்ப முடியாத நிலையில் இருப்பதைக் காணமுடிகிறது. ஏகாதிபத்தியத்தின் இந்தப் பொறியை உலகம் தழுவிய ரீதியில் உடைத்துப் புதிய சூழலை உருவாக்க வேண்டியுள்ளது. இவ்வாறு உருப்பெறும் பிராந்தியக் குட்டி வல்லரசுகளின் வளர்ச்சி தற்காலிகமாகவேனும், பகுதியளவில் எனினும் அமெரிக்க, மேற்குலக ஏகாதிபத்தியங்களைப் பலவீனப்படுத்தும் என்பதும், இந்த அம்சத்தைக் கொண்டு பிராந்திய வல்லரசுகட்கும் ஏகாதிபத்தியங்கட்கும் இடையிலான முரண்பாட்டைக் கையாளலாம் என்பதும், இதன்மூலம் ஏகாதிபத்தியத்தின் பொறியை உடைக்கலாம் என்பதும் தற்போதைய சூழலில் கவனம் கொள்ளவேண்டிய சில அம்சங்கள். இத்தகர்ப்பின் அம்சமாக பிராந்திய, குட்டி வல்லரசுகள் தொடர்பான அணுகுமுறை இருக்க வேண்டும் என்ற சிந்தனை தற்போதைய சூழலில் முக்கியம் பெறுகிறது. இந்தச் சிந்தனைப் போக்கு தற்போது வலுப்பெற்று வருகிறது.

இந்த அடிப்படையில் ஈழப்போராட்டம் தொடர்பான பார்வையில் இதே கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. அதாவது, தமிழ் மக்களின் அடிப்படை நலன்கள் பாதிக்கப்படாதவாறு எமது பிராந்திய வல்லரசான இந்தியாவுடனான எமது உறவு எத்தகையதாக இருக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. முன்பு கூறியபடி ஏகாதிபத்தியத்தின் பொறியை உடைக்கவும், அதற்காக பிராந்திய வல்லரசுடனான உறவை உருவாக்கும் அதேவேளை பிராந்திய வல்லரசின் நலன்கள் போராட்டத்தை மீறவிடாமலும், அதன் மேலாதிக்கம் உடைக்கப்பட வழிவகுத்தலையும் பற்றிய புதிய போக்கு தற்போது வளர்ந்து வருகிறது.

வரட்டுத்தனமான இந்திய எதிர்ப்பாளர்கள் எமது போராட்டத்தின் நலனில் இருந்து, ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கில் இருந்து செயலாற்றுவதில்லை. இத்தகைய கருத்து ஈழப்போராட்டம் பற்றிச் சில சிந்தனையாளர்களால் முன்வைக்கப்படுவதோடு பரவலாக விவாதத்திற்கு உள்ளாகி வருகிறது. இது தொடர்பான விவாதங்களும், புதிய கருத்துகளும் இன்றைய சூழலில் அவசியம் தேவையாகின்றன.

●●●●●●●●●●●●●



கடந்த நூற்றாண்டின் நோர்வேஜிய இலக்கிய ஆற்றல்களில் குறிப்பிடத்தக்கவர் க்னுத் ஹம்சன். இந்த வருடம் செப்டம்பா மாதத்துடன் அவரது முதல் நூலின் நூறாண்டு நிறைகிறது. ஹம்சனை நோர்வே மக்கள் விரும்பி வாசிக்கிறார்கள் என்பதற்கு அவரது நூல்களின் விற்பனையே சாட்சி. அதுவும் கடந்த பத்தாண்டுகளில் அவர் மிகப் பிரபல்யம் பெற்றுள்ளார். அமெரிக்கா, நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் அவர் மிகப் பிரபல்யமாக உள்ளார். இவரது 'நிலவளம்' நாவல் தமிழிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இலக்கியா

●●●●●●●●●●●●●


முதன்முதலாக நோர்வேயில் உயர் தொழில் நுட்பத்துடன் வீடியோ படப்பிடிப்பு செய்பவர்கள்

திருமண வைபவங்களா?

பிறந்தநாள் விழாக்களா?

பொது வைபவங்களா?


கலை நிகழ்ச்சிகளா?

வாழ்வில் ஒருதடவை மட்டுமேவரும் எந்த நிகழ்ச்சியையும், அதே வண்ணம் மாறாமல் வாழ்வு முழுவதும் கண்டுகளித்திட சிறந்த ஒளிப்பதிவுடன் கூடிய வீடியோ படங்களைப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்.

தொலைபேசி: 02/570456, 02/571287

உயர்ந்த தொழில் நுட்பத்துக்கும் தரத்துக்கும் உத்தரவாதம் வழங்கும் படப்பிடிப்பாளர்கள்

INDER VIDEO MOVIES
Lakke Gt 75, Oppg 1
0562 Oslo 5




தொடர்புகள்: K.SHAN & THAYA

Phone 02/570456
02/571287


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நடையர் பார்வையில்


## நாட்டு நடப்புகள்

நோர்வேயில் ஒவ்வொரு கோடை காலத்திலும் குறைந்தது ஒரு தமிழராவது கார் விபத்தில் மரணமாவது கடந்த சில வருடங்களாக நடக்கிறது. இவ்வாறு நிகழ முக்கிய காரணம் அதிவேகம் என்பது தெரியவருகிறது. தவிரவும் விபத்துகளுக்கு போதிய பயிற்சியின்மையும் ஒரு காரணம்.

அதீதவேகத்தில் ஓடுவது தமிழர்களுக்கு மாத்திரம் கைவந்த கலைஅல்ல. இது நோர்வே நாட்டவர் பலருக்கும் வழமையானது. தற்போதைய மன்னர் ஹரால்ட் இளவரசராக இருந்தபோது இந்த 'சாகசம்' செய்தது பொலிசாருக்குத் தெரியவந்தது. இதற்குப் பிறகு, வலதுசாரிக் கட்சியின் முன்னாள் தலைவர் யான்.பி.சீசே இவ்வாறு வேக ஓட்டத்தில் பிடிபட்டார். பிடிபட்டவர்கள் பலரும் சொல்கிற காரணத்தைத் தான் அவரும் கூறினார். வேகம் குறிப்பிட்ட அடையாளப் பலகைகளைத் தான் காணவில்லை

விளையாட்டுத் துறையில் நோர்வேயின் பெயரை உயர்த்துவதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்கள்தாம். நீண்டதூர ஓட்டப் போட்டிகள் பலவற்றில் உலக சாதனை நிலைநாட்டிய இங்கிறிட் கிறிஸ்ரியான்சன் முதல் கைப்பந்தில் (Handball) உலகின் முன்னணிக் குழுவினராகத் திகழும் பெண்கள் வரை ஒரே பெண்களின் சாதனைமயம்தான். அண்மையில் பெண்களுக்கான ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நிகழ்ந்தது. இந்தப் போட்டியில் மேலதிக நேரத்தில் ஜேர்மனி நோர்வேயை வென்றுவிட்டது. ஆரம்பத்திலேயே நோர்வேக் குழுவுக்குரிய ஒரு 'பனால்டி' கொடுக்கப் படாமல் போனது தோல்விக்கான ஒரு முக்கிய காரணம் எனலாம். பெண்கள் எத்தனை திறமையாக விளையாடினாலும் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கப் பெருமளவு ரசிகர்கள் திரள்வதில்லை. ஐரோப்பியக் கிண்ண இறுதிப் போட்டியாக இருந்தாலும் போட்டியில் காணப்பட்ட ரசிகர்கள் தொகை என்னவோ மிகக்குறைவுதான்.

காலமென்றால் அரசனுடைய, இளவரசனுடைய முகங்கள் நாட்டின் சில பகுதிகளில் அறிமுகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இப்போது பத்திரிகை, தொலைக் காட்சி என இவர்களின் வண்ணப் படங்கள் மிகப்பிரசித்தம். இதனால் மாறுவேடம் வில்லங்கத்தையே கொடுக்கக்கூடியது. இளவரசருக்கு யுவதிகள் பொழிந்த



அன்புமழையைக் கண்டு பத்திரிகைக்காரர்களே திகைத்துப் போனார்கள்.

என்பதுதான் அது. இப்படிக் கவனியாமல் போவதால் நடக்கிற விபத்துகளுக்கு யார் பொறுப்பு? சீசேயினதும் அவர் போன்ற சாரதிகளதும் கருத்துப்படி கடவுளாகத்தான் இருக்க முடியும்.

சீசே பிரதமராக இருந்தபோது அவருக்கு இருந்த பிரச்சனைகளை விட, தற்போது ஏற்பட்ட பிரச்சனைகளே அதிகம் எனத் தோன்றுகிறது. முன்னர் வருமான வரிக்குக் கணக்குச் சரியாகக் காட்டவில்லை என்று பிரச்சனை வந்தது. இப்போது வேகப் பிரச்சனை. சீசே மீண்டும் வலதுசாரிக் கட்சியின் தலைமைப் பதவியைப் பிடிப்பதோ, அதன்மூலம் மீண்டும் பிரதமர் ஆகுவதோ நடக்கும் போலத் தெரியவில்லை. அவரது (கட்சித்) தலைவியின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது, கட்சியின் செல்வாக்கு பெருமளவில் அதிகரிக்காது விட்டாலும்.

இன்னொரு சுவையான செய்தி: ஒரு பத்திரிகையில் ஏழு வித்தியாசம் கண்டுபிடிப்பதற்கு போடப்பட்டிருந்த படம் சீசே அதீத வேகத்தில் கார் ஓட்டுவது பற்றியது. இப்படி எமது அரசியல்வாதிகளைக் கிண்டல் செய்தால் என்ன நடக்கும்? 'கரும்பூனை' வாசலில் நிற்கும்.

பெருமளவு ரசிகர்களை ஈர்க்கும் ஆண்கள் உதைபந்தாட்டப் போட்டிகளிலும் நோர்வே சில குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டியது (பெண்ணுக்கு ஆண் சளைத்தவனல்ல?) ஒரே நாளில் நோர்வேயின் வெவ்வேறு பகுதிகளில் நிகழ்ந்த உலகக் கிண்ண, ஐரோப்பியக் கிண்ணத் தெரிவுப் போட்டிகளில் இத்தாலியுடன் நோர்வே மோதியது. இந்த இரு போட்டிகளிலுமே நோர்வே வெற்றியீட்டியது (6/0 , 2/1). இத்தாலிக்கு இந்த இரு தோல்விகளுமே அதிர்ச்சி வைத்தியமாகத்தான் இருந்திருக்கும். நோர்வேயைப் பொறுத்தவரை இந்த வெற்றிகள் நீண்ட காலத்துக்குப் பிறகு நோர்வேயின் உதைபந்தாட்ட எதிர்காலம் பற்றி நம்பிக்கை ஊட்டுகின்றன.

நோர்வேயின் முடிக்குரிய இளவரசர் ஹோக்கன் அண்மையில் பல இடங்களுக்கு 'விஜயம்' செய்திருந்தார். வேறு பெயரில் (Johny from Stovner) தனது நண்பர்களுடன் இவர் சென்ற இடங்களில் இரவு விடுதிகளும் அடக்கம். பழைய

யூலைமாதம் 21ம் திகதியுடன் 18 வயதாகும் ஹோக்கன் தனது பிறந்த நாளுக்குச் சில தினங்கள் முன்னதாக ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தினார். இம்மாநாட்டில் நோர்வேயின் முடி தொடர்பாக ஒரு கருத்தை வெளியிட்டார் அவர். ஹோக்கனைவிட இளவரசி மார்த்தா வயது அதிகமானவர் என்றாலும் நோர்வேயின் பாரம்பரியச் சட்டம் ஒரு பெண் நாடாள அனுமதிக்காது. இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மக்கள் விரும்பினால் தனக்கு வரவேண்டிய, நாட்டை ஆளும் சந்தர்ப்பத்தை மார்த்தாவிடம் கொடுத்துவிடுவதாக அறிவித்தார் ஹோக்கன்.

மாறுவேடத்தில் 'முக்கிய' இடங்களுக்குச் சென்று திரும்ப முடி ஒரு தடையாக இருக்கும் என இளவரசர் நினைக்கிறாரோ தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



*கேள்வி: ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் என்ன பங்கை வகிக்கின்றன அல்லது வகிக்க முடியும்?*

*கே.அன்பழகன், ஒஸ்லோ6*

பதில்: புலம் பெயர்ந்த குழுக்களிடமிருந்து வரும் சஞ்சிகைகள், நூல்கள் ஈழத்தில் வாழும் தமிழ் மக்களின் விடுதலைக்கு எந்த வகையில் இப்போ உதவுகின்றன என்பது என்பதைப் பற்றிச் சரியாக மதிப்பீடு செய்வது சுலபமல்ல. ஆனால் இந்த வெளியீடுகள் சில வழிகளில் தாய்நாட்டு விடுதலைக்கு உதவலாம் என அரசியல் அடக்கு முறைகளுக்கு ஆளாகியுள்ளார்கள். ஒன்று இலங்கை அரசின் இன ஒதுக்கலும் இன அழிப்பும் மற்றது விடுதலையின் பெயரால் தமிழ் விடுதலை இயக்கங்கள் நடத்தும் அடக்குமுறை. இவை இரண்டையும் ஒரே மாதிரியானவை எனக் கருதுவது தவறு. முன்னையது இன்று பிரதான அடக்குமுறை. அதை எதிர்க்காத ஒரு புலம் பெயர்ந்த தமிழ் சஞ்சிகை அரசியல் இருட்டறையிலிருந்துதான் வரமுடியும். அதே நேரத்தில் இயக்கங்களின் தவறுகளையும் உரிமை மீறல்களையும்



நம்புகிறேன். ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகள் பொதுவாக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குச் சாதகமான கருத்துக்களையே கொண்டுள்ளன. அவை விடுதலை இயக்கங்கள் பற்றியும் பல விமர்சனங்களை முன் வைக்கின்றன. பெரும்பாலான பத்திரிகைகள் முன்னர் இந்திய அமைதிப்படையினரின் அடக்கு முறைகளையும் கொடுமைகளையும் கண்டித்தன. இப்போ LTTEஇன் அரசியலையும் மனித உரிமை மீறல்களையும் கண்டிக்கின்றன. அதே நேரத்தில் இவை இலங்கை அரசுக்கு எதிரான ஸ்திரமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. அங்கே அதாவது தாய் நாட்டில் மக்கள் இரண்டு விதமான

கொடுமைகளையும் விமர்சித்தல் அவசியம். தாய்நாட்டில் இந்த இரண்டாவது பணியைச் செய்யும் நிலையில் ஒரு சஞ்சிகையும் இல்லை. அதற்கான சூழ்நிலைகள் இல்லை. இந்தப் பணியைச் சில வெளிநாட்டு சஞ்சிகைகள் செய்ய முயற்சிக்கின்றன. இன்றைய நிலையில் இயக்கங்களை விமர்சிக்கும் சுதந்திரம் இல்லாதவரை தமிழ் மக்களின் விடுதலை உணர்வையும் அரசியல் அறிவையும் செறிவாக வளர்க்க முடியாது. ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் தாய் நாட்டுத் தமிழரின் சார்பில் இயக்கங்களை ஆக்கபூர்வமான வழியில் விமர்சிப்பதும் அவற்றின் எதேச்சாதிகார இராணுவப் போக்குகளை எதிர்ப்பதும் அவசியம். இது அவர்களுக்கு இருக்கும் பாரிய பொறுப்பாகும். இந்தக் கடமையை



அவர்கள் செய்யப் புலம் பெயர்ந்த தமிழ்ச் சஞ்சிகைகள் பத்திரிகைகள் பயன்படலாம். இன்று தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் அரசியல், இராணுவத்திற்குக் கீழ்ப்படுத்தப் பட்டுள்ளது. தமிழ்த் தேசியவாதம் தனது எதிரியான சிங்களப் பேரினவாதத்தின் பிரதி விம்பம் போல் இயங்குகிறது. இதன் கொடிய வெளிப்பாட்டினை முஸ்லீம் மக்கள் மீது நடத்தப்பட்ட வன்செயல்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். இத்தகைய ஒரு தேசியவாதம் விடுதலைக்கு உதவாத, அதற்கு எதிரான ஒன்றாகும். இந்தப் போக்கினை எதிர்த்துக் கேள்வி எழுப்பும் சுதந்திரம் கூட ஈழத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் புலம் பெயர்ந்தோரால் வெளியிடப்படும் சஞ்சிகைகள் பத்திரிகைகள் தமிழ் மக்களின் நலன்களைப் பேணும் வகையில் விடுதலை இயக்கங்களை விமர்சித்து ஜனநாயக மயமாக்கலுக்கு ஆதரவாக வெகுஜன அபிப்பிராயத்தை உருவாக்கி கட்டி வளர்க்க உதவலாம். ஆனால் எனது அபிப்பிராயத்தில் பல புலம் பெயர்ந்த சஞ்சிகைகள் இந்தப் பணிக்குத் தயாரான வளர்ச்சிக் கட்டத்தை அடையவில்லை. இது இந்தச் சஞ்சிகைளின் அரசியல் 'குறைபாடுகளைக் காட்டும் அதே வேளையில் வேறு சில சமூக ரீதியான பிரச்சனைகளையும் மறைமுகமாகப் பிரதிபலிக்கிறது.

பல புலம் பெயர்ந்த தமிழ்ச் சஞ்சிகைகளின் பொதுவான குறைபாடு என்னவெனில் அவை தாய்நாட்டு அரசியல் நிலைமைகளையும் இயக்கங்களின் போக்குகளையும் தொடர்ச்சியாக ஆழமாக விமர்சிப்பதில்லை. தமிழ்த் தேசிய விடுதலையின் உள்ளடக்கம் என்ன என்பது பற்றிய விவாதங்களை நடத்துவதில் அவை ஆழமான அக்கறையைக் காட்டுவதாகத் தெரியவில்லை. மிகவும் தீவிரமான விமர்சனங்கள் கவிதைகளுக் கூடாக வந்த வண்ணமிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. ஆனால் அரசியல் விளக்கங்கள் விவாதங்கள் போதாது.

புலம் பெயர்ந்த தமிழ் வெளியீடுகளில் இத்தகைய பலவீனத்திற்குப் பல காரணங்கள் உண்டு. அரசியல் சமூக விமர்சனங்களுக்கு வேண்டிய அடிப்படை ஆய்வைத் தொடரும் வசதிகள் குறைவு. தரமான ஈடுபாடுள்ள ஆட்களின் போதாமை, பொருளாதாரத் தடைகள், மிரட்டல்கள் போன்ற பிரச்சனைகளைப் பலர் குறிப்பிடுவதுண்டு. இவற்றை நாம் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தின் தன்மைகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. ஆர்வமும் அறிவாற்றலும் உள்ள சில தமிழ் இளைஞர்கள் சஞ்சிகையின் தோற்றத்திற்கும் தொடர்ச்சிக்கும் காரணகர்த்தாக்கள். இவர்கள் மெச்சப்பட வேண்டியவர்கள். ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஆழ்ந்த அரசியல் உணர்வோ ஈடுபடோ உள்ளவர்கள் மிகக் குறைவு. பலர் குறுகிய தமிழினவாதிகள் என்பதிலும் தம் இனவாதத்தை தனிப்பட்ட சம்பாசனையில் வெளிப்படுத்துவதுடனும் திருப்தி அடைபவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இவர்களில் ஒரு சாரார் வெளிநாட்டில் தொடர்ந்து இருப்பதற்கு தாய்நாட்டில் யுத்தம் தொடர்வது அவசியம் எனும் குறுகிய சுயநலத்துடன் இராணுவ ரீதியல் பலம் வாய்ந்த இயக்கங்களுக்கு பண உதவி செய்பவர்கள். இத்தகைய தமிழர்களுக்குத் தமிழினத்தின் விடுதலையில் எந்தவித அக்கறையும் கிடையாது. அங்கு தமிழர்கள் அரசாலும் இயக்கங்களாலும் கொல்லப்படுவது கூட இவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துவதில்லை. அதற்கு மாறாக அத்தகைய செயல்கள் யுத்தம் தொடர உதவுவதாகக் கண்டு ஆறுதல் அடைபவர்கள் இவர்கள். இன்னொரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாரார் விமர்சனக் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் தமது பாதுகாப்பு, ஊரில் தமது உறவினர் பாதுகாப்புக் கருதி அபிப்பிராயத்தை வெளியே சொல்லாது ஒதுங்கிக் கொள்வார்கள். இன்னொரு சாரார் அங்கு தீவிரமாகப் பலதியாகங்களைச் செய்து போராடிக் கொண்டிருக்கும் இயக்கத்தை விமர்சிப்பது சிங்கள அரசுக்கெதிரான போராட்டத்தை பலவீனப் படுத்தும் என்பதால் இயக்கங்களின் அநியாயங்களையும் நியாயப் படுத்துவார்கள். இன்னுமொரு சாரார் முடிந்தவரை அரசியல் விமர்சனங்கள் கேட்காத துாரத்திற்கு வாழ்வமைத்துக் கொண்டவர்கள். சிலவேளை இவர்கள் கரைச்சலைத் தவிர்ப்பதற்காக இயக்கங்களுக்குப் பணம் கொடுப்பார்கள். இப்படியே பலவிதமான போக்குகள்.

இவையெல்லாம் புலம் பெயர்ந்த தமிழ் வெளியீடுகளின் அரசியல் பணிகளுக்கு தடைகளாய் சவால்களாய் அமைகின்றன.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் அரசியல் உணர்வை வளர்த்து அதற்கூடாக பரந்த அளவில் தாய் நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போக்குகளை ஜனநாயகமாக்க உதவும் செயற்பாடுகளுக்கு உதவுவது குறுகிய காலத்தில் செய்யப்பட வேண்டிய அவசியம் இன்று உள்ள போதும் இதைச் சாதிப்பது சுலபமல்ல. ஆனால் இது ஒரு அடிப்படைத் தேவை. இந்தத் தேவையையும் இதைப் பூர்த்தி செய்வதிலுள்ள தடைகளையும் நன்கு ஆராய்ந்து செயற்படாவிடில் புலம் பெயர்ந்த தமிழ் வெளியீடுகளால் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. அதுமட்டும் போதாது. வெளிநாடுகளில் இடம் பெறும் இத்தகைய செயற்பாடுகள் தாய் நாட்டிலுள்ள மக்கள் குழுக்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டு இயங்க வேண்டும். ஒருவகையில் புலம்பெயர்ந்த தமிழ் இலக்கிய அரசியல் செயற்பாடுகள் தற்காலிகமானவை என்றே எண்ணத் தோன்றுகிறது. இப்போது வெளிநாட்டுத் தமிழர் மத்தியில் (குறிப்பாக ஐரோப்பா) இயங்கும் சஞ்சிகைகளைப் பத்திரிகைகளை வெளியிடுவோரிடம் இருக்கும் தமிழ் மொழியாற்றல், அரசியல் ஈடுபாடு போன்ற அடிப்படைச் சொத்துக்கள் அடுத்த சந்ததியிடம் இருக்குமா என்பது சந்தேகம். தற்போதைய சந்ததி எழுத்தாளர்கள் இதை உணர்ந்து செயற்படுதல் அவசியம். இது தாய்நாட்டுக் குழுக்களுடன் அமைப்புக்களுடனும் ஒருங்கிணைந்து இயங்குதலின் முக்கியத்துவத்தை மேலும் பலப்படுத்துகிறது.

## புதிய உலகப் பத்திரிகை

புதிதாக மாதாந்தப் பத்திரிகை ஒன்று பாராளுமன்ற அங்கத்தினர்களுக்காக உருவாக்கப் பட்டுள்ளது. 32 நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தினர்கள் மற்றும் பிரமுகர்களுக்காக இது உருவாகியுள்ளது. பத்திரிகையின் பெயர் 'Partido Nuevo' என அறிவிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் முக்கிய உலகப் பிரச்சனைகள், வடக்கு - தெற்கு முரண்பாடு (வளர்ச்சியுற்ற, வளர்முக நாடுகட்கிடையே உள்ள முரண்பாடு), சூழலியல் பிரச்சனை, அகதிகள் பிரச்சனைகள் போன்றவற்றை ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரமுடியும். இப்பத்திரிகை போலிஷ், ஹங்கேரிய, ருஷ்ய, ஜேர்மனிய, சேபோகிறாடிஸ், ஆங்கிலம், ஸ்பானிய மொழிகளில் வெளிவருகிறது.

- விடுப்பர் -



## கருத்தடைப் பயங்கரம்

*பயங்கரவாதம் ஒவ்வொரு வடிவில் தோற்றம் பெறுவதுண்டு. பிறேசில் நாட்டில் மற்றைய எந்த நாடுகளைப் போலுமல்லாது இது ஒரு புதிய வடிவை எடுத்துள்ளது. கருத்தடை அறுவைசிகிச்சை எனும் பெயரில் பெண்கள்மீது இங்கு பயங்கரவாதம் பரவவிடப் பட்டுள்ளது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, பிறேசில் நாட்டில் 15வயதுமுதல் 54வயது வரையிலான பெண்களில் அரைவாசிப் பேருக்குமேல் இவ்வாறான கட்டாய கருத்தடை அறுவைசிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர். வறுமை எல்லையில் வாழும் பெண்களில் 80% ஆனவர்கள் இவ்வாறான கட்டாய அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.*



*இத்தகைய கருத்தடை அறுவை சிகிச்சை முறையை தனிநபர் மருத்துவமனைகளே மும்முரமாக மேற்கொள்கின்றன. இதற்கான உதவியை வெளிநாடுகளிலிருந்து அதிலும் குறிப்பாக அமெரிக்க நிறுவனமான* Association For Volantary Sterilisation *இடமிருந்து பெறுகின்றன. இதன் கூற்றுப்படி 'உற்பத்தியை நிறுத்துவது' என்பதாவது வறுமை நிறைந்த குழந்தைகளின் பிறப்பை நிறுத்துவதாகும். இதனால் இக் கருத்தடை முறையானது வறுமை நிறைந்த பெண்கள்மீது மேற்கொள்ளப் படுகின்றது. இதில் இன்னும் கொடூரம் என்னவெனில், ஒரு பெண் வேலைத்தலத்துக்கு வேலைக்கு விண்ணப்பிப்பதானால் அவள் கருத்தடை செய்துள்ளமைக்கான அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவேண்டும். பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டாலேயே வேலைகளுக்கு அனுமதி கிடைக்குமாம்.*

*இத்தகைய கருத்தடை முறையால்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலருக்கும் பலவித தொற்று நோய்கள் ஏற்பட்டுள்ளதுடன் பலர் இறக்கவும் நேரிடுகின்றது. அண்மையில் 'எமக்கு பிள்ளைகள் பெறுவதற்கான உரிமையுண்டு' எனும் சுலோகங்களுடன் பெண்கள் ஊர்வலம் போயுள்ளனர். இதிலிருந்து இதன் மறைபொருள் என்னவென்பதைப் பலராலும் ஊகிக்க முடியும்.

அமெரிக்காவும், சர்வதேச நாணயநிதியமும் இத்தகைய ஒழுங்கமைக்கப்படாத கட்டாய கருத்தடை முறைக்கு பலமான அழுத்தத்தை 60களுக்கு முன்பிருந்து கொடுத்து வருகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

- தேவகி -

## இரண்டு இலட்சம் மரணங்கள்...



அண்மையில் நடந்துமுடிந்த வளைகுடாப் போரில் நேரடியாகவோ மறைமுகமாகவோ இரண்டு இலட்சம் பேர்வரை மரணித்தனர் என சூழலியல் நிறுவனமான கிறீன்பீஸ் நிறுவனம் திடுக்கிடும் தகவலை மேமாத இறுதியில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஏறத்தாழ 120,000 ஈராக்கிய துருப்புகள் 43நாள் போரில் கொல்லப் பட்டுள்ளனர். இதில் பாதிப்பேர் 100மணிநேரம் இடம்பெற்ற தரைச்சண்டையின் போது கொல்லப்பட்டனர். 49,000 இற்கும் 76000இற்கும் இடைப்பட்ட பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர். அமெரிக்கா, சவூதிஅரேபியா, குவைத் என்பன தீவிர தணிக்கைகளின் மூலம் இவற்றை இருட்டடிப்புச் செய்துள்ளன.

இது இவ்வாறிருக்க, மற்றொரு உதவி நிறுவனத்தின் தகவல்படி நாளொன்றுக்கு 1500 குழந்தைகள் இறப்பதாகவும், இதனால் எதிர்வரும் 5வருட காலப்பகுதியில் 170,000 குழந்தைகள் இறக்க நேரிடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் முழுமையாக ஒரு சந்ததியே இல்லாது போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்புதிய முறைப் போரினால் உடனடியாக ஏற்படும் இழப்புகள் குறைவாகவும் அதன் தொடர்ச்சியான விளைவுகளால் பல்லாயிரம்பேர் இறக்கும் போக்கே உருவாகியுள்ளது.

கழிவுப்பொருள் தேக்கம், சுகாதார சேவைகளின் முடக்கம், வைத்தியசாலைகள் உடைக்கப்பட்டமை என்பனவே இத்தகைய மறைமுகமான இழப்புகளுக்குக் காரணமாக அமைவதாக தெரிவிக்கப்படுகிறது.


- சேதுபதி -

மரபு.

MARABU
P.BOX 232
WANTRINA SOUTH
VICTORIA 3152
AUSTRALIA.



## காதோரம் காதோரம் காதோரம் காதோரம் காதோரம்



இந்தியாவின் சுதந்திரதினக் கொண்டாட்டத்தையொட்டி இலங்கையில் இந்து கலாசார மொழி அமுலாக்கல் அமைச்சு கலாசார விழாக்களை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது. ம்... வடக்கு கிழக்கில் தமிழர்களை உரிமைகள் பறித்து உணவு இருப்பிடம் இல்லாமல் செய்து ராணுவ பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்ட அரசில் தமிழர்கள் பெயரால் இருக்கும் அமைச்சு இதுபற்றிக் கரிசனைகூட இல்லாமல் இன்னொரு நாட்டின் சுதந்திர தினத்தைக் கொண்டாடி மகிழ்வதுதான் இலங்கையின் 'வழமை'. இதுதான் தமிழ் மக்களின் விதி!

செய்திகேட்டோன்

முன்னரும் பல தடவை சொல்லியாகிவிட்டது, சிங்கள அரசின் தமிழ் மக்கள் மீதான கொடுமைகளை. அத்தோடு அரசின் பாரிய குண்டு வீச்சினாலும், உணவுப் பொருட்கள் தட்டுப்பாட்டினாலும், சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் கொழும்புக்குப் படையெடுத்து வந்த தமிழர்கள் பல்லாயிரம். (இத்தொகை ஒருலட்சம் என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன) அண்மையில் இவ்வாறு வழிநெடுகிலும் பல துன்பங்களைச் சந்தித்து வந்தவர்களை ராணுவம் துப்பாக்கியால் பலியெடுத்தது பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். (பின்னர், கட்டுப்படுத்த முடியவில்லை என அரசின் அறிக்கை வேறு) ஒருவாறு வவுனியாவை அடைந்த மக்கள் அங்கு அரச படைகளோடு முகாமிட்டுள்ள 'அரசுசார்புக் குழுக்களா'ல் புலிப் பிரதேசத்தில் இருந்தா வருகிறீர்கள் எனக் கேட்டுத் தாக்கப்படுகின்றனர். அப்போதாயின் இவ்அரச சார்புக் குழுக்கள் தாம் கூறுவது போல தமிழ் மக்களுக்காகப் போராடவில்லை என்றாகிறது. அவர்களின் கருத்துப்படி வேறு தேச (வேறு இன) மக்களாகவே தமிழ் மக்கள் கணிக்கப்படுகிறார்கள். இதன் பின்பும் இவர்கள் தமிழ் மக்களுக்காகவே போராடுவதாகக் கொக்கரிக்கின்றனர். இது தமிழ் மக்களுக்குத் தேவையா?

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறியவர்கள் (தப்பியவர்கள்) கூறியது: வடபகுதியில் பெற்றோல் விலை லீற்றர் 1000ரூபா, ஒரு வருடமாக மின்சாரம் இல்லை, அரசு பல முக்கிய பொருட்களுக்குத் தடை விதித்துள்ளது. இதனால் பல அத்தியாவசியப் பொருட்கள் கண்ணில் படுவதேயில்லை, பட்டாலும் யானை விலை, குதிரை விலை. குளிக்கச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சவர்க்காரம் கிடையாமல் பலர் பனங்காயைப் பயன்படுத்துகிறார்கள்.

கொழும்பு அட்டகாசங்கள் தனி. கொழும்பில் வீற்றிருப்பது சிங்கள பௌத்தப் பேரரசு. இதன் கொடூரக்கரம் 'சுதந்திரம்' கிடைத்த நாளில் இருந்தே தமிழர்மீது படர்ந்து வருகிறது. 1983இன் பின்னர்தான் 'தமிழர் விடுதலை (?) இயக்கங்கள்' தீவிரம் பெற்றன. எட்டு ஆண்டுகள்கூட முடியாத நிலையில் இந்த இயக்கங்கள் கொழும்பில் கூடாரமிட்டுக் கடைவிரித்தன. என்னவோ ஏதோ இதற்குப் பிள்ளையார் சுழி போட்டுத் தொடக்கிவைத்தது விடுதலைப் புலிகள்தாம்! புலிகளின் இந்த ஊடல் சிறிது காலமே நீடித்தது. இப்போது மற்றைய இயக்கங்கள் கொழும்பில் நன்றாகவே கடைவிரித்துள்ளன. பிரேமதாசாவுக்கு ஆலவட்டம் பிடிப்பதும் குஞ்சம் பிடிப்பதும் ஆளுக்கு ஆள் எடுத்த குத்தகையில் நடக்கிறது. நான் கொண்ட சந்தேகம் எல்லாம் ஏழெட்டு வருடத்திற்குள் தமிழர் விடுதலைப் போராட்டம் எப்படிக் கொழும்பை நோக்கி நகர்ந்தது என்பதுதான். இது யாருடையவோ தலையெழுத்து என்றுவிட்டு வீடியோ பார்க்கப் போகிறீர்களா? போங்கள் எனக்கென்ன?

என்ன ராசியோ ஏதோ இம்முறை காதில் விழுந்தவற்றில் கொழும்பை மையப்படுத்திய செய்திகள்தான் ஏராளம். முன்னரும் கொழும்புக்கு வந்த யாழ்ப்பாணத் தமிழர்களின் கஷ்ட நஷ்டங்கள் பற்றிக் கூறியிருந்தேன். சிலகாலம் முன்னதாக கொழும்பு முக்கூட்டுத் தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலுக்குப் பிறகு தமிழர்கள் பலர் கைதாகிப் பல சித்திரவதைகளுக்கு ஆளாகினர். பொலிஸ் விசாரணை என்று அடிக்கடி தமிழர்கள் அழைத்துச் செல்லப்படுவது வழமையாகிவிட்டது. இந்த 'விசாரணை', 'சந்தேகம்' போன்ற நடவடிக்கைகளால் கொழும்புவாழ் தமிழர்கள் மிரண்டு போயுள்ளதோடு இதில் இருந்து தப்ப வழிவகை தேடுகின்றனர். இதைச் சாட்டாக வைத்துக்கொண்டு 'கொழும்புக் குழுக்கள்' வீட்டுக்கு வீடு சென்று மிரட்டிக் கப்பம் வாங்குகின்றன. தஞ்சம் தேடி வந்தவர்கள் ஒருபுறம் 'சந்தேகப்' பேய்க்கும், மறுபுறம் கப்பப் பேய்க்குமாக பயந்து வாழ்கின்றனர்.

• *அண்மையில் நண்பர் ஒருவரை ஒஸ்லோ புகையிரத நிலையத்தில் சந்திக்க நேர்ந்தது.*

*"இவங்கள் என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாங்கள் எங்களை, நாங்கள் ஆர்? உவங்கள் ஆர்? எந்த விதத்திலை நாங்கள் குறைஞ்சுபோனம்? அவர்களை மாதிரி நாங்கள் பிச்சையா எடுக்கிறம்?...."*

*வந்த நேரத்தில் இருந்து சூடாகக் கொட்டிக் கொண்டிருந்தார். எனக்குத் தலையும் விளங்கவில்லை, வாலும் விளங்கவில்லை. என்னைத் திட்டவில்லை என்பது மட்டும் புரிய மெதுவாகக் கேட்டேன்.*

*"என்ன ... கோபமா வாறீங்க யார் உங்களைக் குறை சொன்னது?"*

*"என்னை எண்டாக்கூடப் பறவாயில்லை .... எங்கடை ஆக்களையெல்லோ சொல்லிப் போட்டான்கள்."*

*எனக்கோ சுவாரஷ்யம் தாங்க முடியவில்லை. யார் அவர்கள்? இவருக்கு இவ்வளவு தன்மான இனமான தேசிய உணர்வு வரக் காரணமான 'அவங்கள்' யார் என்று அறிய ஆவல் பொத்துக் கொண்டு வந்தது. ஏனென்றால் முன்பு அவரிடம் நான் நாட்டுப் பிரச்சினைகள் பற்றி ஏதாவது பேச்சை எடுத்தாலே "எங்களுக்கேன் இந்தப் பிரச்சனைகள், நாங்கள் உழைக்க வந்தனாங்கள். எங்கட வேலையைப் பாத்துக் கொண்டு இருக்கிறதுதான் நல்லது, மற்ற விஷயங்கள் தேவையில்லை" என்று சொல்பவர். இவருக்குத் திடீரென்று இப்படி ஆகிவிட்டதே என்று பயமாகக் கூட இருந்தது. "அவன்தான் வடக்கத்தையான், இந்தியன்" அறைந்தாற்போலப் பதில் வந்தது.*

*"ஏன் அவன்...?"*

*"ஏனோ ... நான் எம்பஸிலை விசா கேட்டன், அம்மாவை வரச் சொல்லி அங்கை போய்ப் பாக்கலாம் எண்டு.. உங்கட ஆக்கள்தான் பல வன்செயல்களை அங்க செய்யிறதால விசா தரேலாது எண்டு சொல்லிப்போட்டான் ....நானும் விடேல்லை, கொஞ்சப் பேர் செய்யிற வேலையாலை ஏன் இவங்கள் இப்பிடிச் செய்யிறாங்கள் எண்டு எவ்வளவு சண்டை பிடிச்சுப் பார்த்தன், முடியாமல் போச்சு.... அம்மா சுகமில்லாமல் இருக்க ஒருக்கா இந்தியாவுக்குக் கூப்பிட்டுப் பாத்திட்டு வரலாம் எண்டால் இப்பிடியாப் போச்சு... சீ"*

*"அட விஷயம் உதுதானோ" என்று நான் கேட்க "என்ன உதுதானோவோ, எங்கடை ஆக்களை எவ்வளவு கேவலமா நினைக்கிறாங்கள் ...." என்றார் அவர்.*

*"எமக்கேன் தேவையில்லாத பிரச்சனை எண்டு இருந்தால் எல்லாமே இப்பிடித்தான்... அவனவன் மடியிலை கைவைக்கேக்கை தான் சுடுகுதோ?"*

*"உன்னோடை கதைச்சுச் சரிவராது" என்று கழன்றுகொண்டார் நண்பர்.*

**செ**ய்திகேட்டோன்மீது பலருக்குப் பலவித கருத்துண்டு. என்ன செய்ய, நான் கேட்டவற்றைத் துருவித் துருவி ஆராய்ந்துவிட்டு எழுதுகிறேன். இதனால் சிலருக்குக் கோபம்தான். ஒவ்வொருவருக்கும் தமது பக்க 'ஊத்தைகளை' எழுதும்போது கோபம் வரும், மற்றப்படி ஒன்றுமில்லை. எல்லாப் பக்க ஊத்தைகளையும்தான் எழுதுகிறேன்.

நேற்று தினகரன் வார இதழ் பார்த்தேன். தினகரன் என்றாலே அரச கட்டுப்பாட்டு செய்திகள் என்பது ஊர் அறிந்ததே. செய்திகள் உப்புச் சப்பற்று இருக்கும். காரணம் உண்மைநிலை செய்திகளில் இருப்பதில்லை. அரசின் செய்திகளை மட்டுமே தாங்கிவரும் ஊதுகுழல் பத்திரிகை அது.

இது மட்டுமல்ல பல பத்திரிகைகள் சஞ்சிகைகள் வாசித்தபிறகு எனக்கு மனதில் சில கேள்விகள் எழுகின்றன. பத்திரிகாதர்மம் என்றால் என்ன? நியாயவாதம் என்றால் என்ன? மக்களின் துயர்களை மக்களின் நிலையில் இருந்து வெளிக்கொணர்வதுதான் தர்மம், நியாயம். ஆனால் 'பல' பத்திரிகைகள், சஞ்சிகைகள் தாம் சார்ந்து நிற்கும் அரசு, அமைப்புகள்,

---



இயக்கம் ஆகியவற்றின் ஊதுகுழல்களாக இருந்து பல விடயங்களை மூடிமறைத்து வருகின்றன. நியாயம் எது என்று தெரிந்தாலும் தாம் சார்ந்து நிற்கும் அமைப்புக்காக வக்காலத்து வாங்குபவை இவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வாறே அண்மையில் தினகரன் இதழிலும் ஒரு புதிய பகுதி தொடங்கியுள்ளது - பெயர், 'புல்லட் பொக்ஸ்'. இந்தப் பகுதியின் மூலம் எடுபடாதுபோன சில விடயங்கள் எடுபட வைக்கப்படுகின்றன. இதில் வடக்கு கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகளை, தவறுகளை, ஜனநாயக விரோதப் போக்குகளை மட்டும் நாக்குக்காகக் கொட்டித் தீர்த்து செய்திகள் வருகிறது. இதன்மூலம் புலிகள் மீது எதிர் அபிப்பிராயம் உருவாக்குவதே நோக்கம். மறுபக்க உண்மையான அரச, ஏனைய இயக்க நடவடிக்கைகளைத் தொடுவதேயில்லை. வடக்கு கிழக்கில் புலிகளால் ஜனநாயகம் மறுக்கப் படுகிறது என்பது உண்மை. அதேவேளை அரசும் கொழும்புத் தமிழ்க் குழுக்களும் மோசமான படுகொலைகளை நிகழ்த்துவது பற்றி எந்தவிதமான குறிப்புக்கூட இல்லை. தர்மம், நியாயம் பற்றி 'புல்லட்'டுகளுக்குப் புரியுமோ?

அண்மையில் நோர்வே வந்திருந்த ஈழத்துப் பெண் ஒருவர் கூறியது இது: இன்று வடக்கு கிழக்கில் இருந்து வெளியே வருவதானால் புலிகளிடம் காசுகட்டி அனுமதி (Exit Visa?) பெறவேண்டும். அவரது உறவுப் பெண் ஒருவருக்கு மிக ஆபத்தான நிலையில் ஒரு சிகிச்சை பெறக் கொழும்பு செல்ல அனுமதி பெறவேண்டியிருந்தது. நீண்ட நாட்களாக இதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. நீண்ட நாட்களின் பின் புலிகள் அனுமதி கொடுத்தபோது, நோய் மிக மோசமடைந்திருந்த அவர் கொழும்பு கொண்டுவரப்பட்ட மூன்றாம் நாளே இறந்துவிட்டார். ஆனால் 'பெரிய' கைகள் பலருக்கு கேட்டவுடன் வெளியேற்ற அனுமதி (பலமான காரணங்கள் இல்லாவிட்டாலும்) வழங்கப்படுகிறது. இது நியாயமா என்று என்னிடம் கேட்டார். நான் உங்களிடம் கேட்கிறேன்.

# மூன்று அரபுக் கவிதைகள்

## லெBனான்
*- கலீல் ஹாவி -*

சுவர்களை நோக்குஞ் சுவர்களாயிருந்தோம்
பேசுவது வேதனையாயிருந்தது
நம்மிடைத் தூரத்தை உணர்வது வேதனையாயிருந்தது
துன்பம் தொண்டையை இறுக்கப்
பேசுவது வேதனையாயிருந்தது.

## பெBய்ரூத்
*- ஸமி ம:தி -*

அப்போ இதுதான் பெBய்ரூத்,
கூட்டத்தில் இழந்து
நொறுங்கிய முகங்களை முறைத்தவாறு.
அப்போ இதுதான் பெBய்ரூத்,
எத்தனையோ காதலரையுடைய ஒருபெண்.
அவள் சுடப்பட்டபோது
கொலையாளி கேட்பாரின்றி வெளியேறினான்.

## மூன்றாமுலகம்
*- ஸலா: நியாZ -*

ஒரு சதவீதம்
ஆறுசதவீதம்
பத்துசதவீதம்
படங்களிலும் பத்திரிகைகளிலும் அரசு முறுவலித்து,
அச்சகங்களில் அமர்ந்து கொள்கிறது
அஞ்சற்தலைகளில் தன் நாட்களைப் பொறித்து
வெற்றிகளைப் பதிவுசெய்கிறது
பழிவாங்கல்களைப் பதிவுசெய்கிறது.

இன்றைய கவிஞன் கணக்குகளை வாசிப்பதில்லை,
அவனது நாளை, இன்று.
தனக்குப் பசித்தால் ஆட்சியாளரின் பாதையை
மறிக்கிறான்.
தனக்குக் குளிர்ந்தாற் கொடியைத் திருடுகிறான்.

(தமிழில்: மணி)



"சஞ்சயன்"

VALG'91

# பிராந்தியத் தேர்தல்களின் பின்

1989 பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மாவட்ட மாநகர தேர்தல் செப்ரெம்பர் பத்தாம் திகதி நடைபெற்று முடிந்துள்ளது. நாட்டில் நிலவிய பாரிய பொருளாதார அரசியல் நெருக்கடிகளிற்கு மத்தியில் நடைபெற்ற இத் தேர்தல் அரசியல் கட்சிகளின் பலத்தை மீண்டும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கும் ஒரு களமாக நடைபெற்று முடிந்த தேர்தல் அமைந்துள்ளது.

## மாவட்ட மாநகர சபைகளின் அமைப்பு

நோர்வே ஒரு சமஷ்டி அமைப்பு முறையைக் கொண்ட நாடல்ல. எனினும் ஒவ்வொரு மாகாண மாநகரசபைகளினதும் அதிகாரம், அரசியலமைப்பு ரீதியாக வரையறுக்கப் பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்களை மாவட்ட மாநகர சபைகளும் ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை மத்தியிலுள்ள அரசும் கொண்டுள்ளன. குறிப்பாக சமஷ்டி ஆட்சி நிலவும் இந்தியாவில் இந்திய மாநிலங்களுக்கு உள்ள நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்களுடன் ஒப்பிடுகையில் சில விசேட அதிகாரங்களை இந்நாட்டின் மாவட்ட மாநகர சபைகள் கொண்டு இயங்குகின்றன.

ஒவ்வொரு மாவட்டசபையும் (fylke) தனது வருமானத்தில் 60,3%ஐ மத்தியிலுள்ள அரசிடமிருந்து நேரடியாகவும், வருமானவரி மூலம் 34%ஐயும் ஏனைய வருமானங்களான மறைமுகவரி, சிறுவருமானம் போன்றவற்றின் மூலமும் பெற்று 5,7% பெற்று வருடாந்த வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்கின்றன. அதேபோல் ஒவ்வொரு மாநகரசபையும் வருமானவரி மூலம் 56,4% மத்தியிலுள்ள அரசிடமிருந்து 27,3%ஐயும் மிகுதி 16,35ஐ மறைமுகவரி, வட்டி, பங்குலாபம் மாவட்ட சபைகளிடமிருந்து பெறும் தொகை என்பவற்றினூடாகப் பெற்றுத் தமது வரவு செலவு திட்டங்களைத் தயாரிக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட மாநகர சபைகளும் தத்தமது பிரதேசங்களில் பொதுச் சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் பொருளாதார சமூக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள அதிகாரம் கொண்டுள்ளன.

## தேர்தல் முடிவுகள்

நடைபெற்று முடிந்த தேர்தல் அரசியல் அறிஞர்களுக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிராக 1972 காலப்பகுதியில் ஏற்பட்ட அதே சூழ்நிலை தற்போது உருவாகி வருவதாக தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. தேர்தலில் பாரிய முன்னெடுப்பை எடுத்துள்ளசோசலிஸ இடதுசாரிக் கட்சியும் (SV) விவசாயத்துறையினரை பெருமளவு பிரதிநிதித்துவப் படுத்தும் மத்திய கட்சியும்(SP) ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வே இணைவதற்கு ஆரம்பம் முதலே எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. தேர்தல் முடிவுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள பிரபல தினசரிகளான வேகே, டாக்பிளாத, ஆப்தன்பூஸ்தன் என்பன தேர்தல் முடிவுகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், தொழிற்கட்சியின் நிச்சயமற்ற ஐரோப்பிய கொள்கைக்கும் எதிராக மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பு எனக் குறிப்பிட்டுள்ளன. நடைபெற்ற தேர்தலில் ஏறத்தாழ சுமார் 76% ஆனோர் வாக்களித்துள்ளனர்.

## தொழிற்கட்சி (AP)

நடைபெற்ற தேர்தலில் பாரிய இழப்பினை சந்தித்துள்ள கட்சியாக தொழிற்கட்சியே உள்ளது. 1942களிற்குப் பிறகு தற்போதுதான் முதற்தடவையாக தொழிற்கட்சி இப் பாரிய தோல்வியை சந்தித்துள்ளது. ~~வாக்களித்த 76 வீதமானோர்களில்~~ சுமார் 30,8% வாக்குகளை மட்டுமே தொழிற்கட்சி பெற்றுள்ளதானது மக்கள் மத்தியில் இக் கட்சி செல்வாக்கு இழந்து வருவதைக் குறிக்கிறது. தொடர்ந்து வேகமாக அதிகரித்து வரும் வேலையற்றோர் பிரச்சனையிலிருந்து தற்போது பெருமளவு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு, ஐரோப்பிய சமூகம் தொடர்பாக தொழிற்கட்சி கடைப்பிடித்து வரும் பலவீனமான கொள்கையே கட்சியின் இப் பின்னடைவிற்கு காரணமாகும். பல மாவட்ட மாநகர சபைகளில் அதிகாரம் இழந்துள்ள தொழிற்கட்சி நாட்டின் கிழக்குப் பிராந்தியத்திலேயே பெருமளவு தோல்வியை சந்தித்துள்ளது. எனினும் தனிக்கட்சி என்ற ரீதியில் தொழிற் கட்சியே தொடர்ந்தும் முன்னணியில் இருக்கிறது.

## வலதுசாரி(hoyre)

வலதுசாரிக் கட்சியைப் பொறுத்தவரை நடைபெற்று முடிந்த தேர்தல் பாரிய தோல்வி இல்லாவிட்டாலும் தேர்தல் முடிவு சற்றுப் பின்னடைவையே ஏற்படுத்தியுள்ளது மட்டுமின்றி கட்சியின் தலைமைப்பதவியை ஏற்ற காஸி குல்மன் ∴பீவ மீது கட்சியினர் வைத்திருந்த நம்பிக்கையை கட்சித் தலைவி பெருமளவு ஈடு செய்யவில்லை என்றும் கருதப்படுகிறது. 1957க்குப்பின் கட்சி பெற்ற மிகக் குறைந்த ஆதரவாக தற்போதைய தேர்தல் முடிவு அமைந்துள்ளது. இது பற்றிக் கருத்து வெளியிட்டு அரசியல் ஆய்வாளர் ஒருவர் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (EOS) தொடர்பாக வலதுசாரி கட்சி தனது நிலைப்பாட்டை மீளாய்வு செய்யப்படாத பட்சத்தில் தொடரும் காலங்களில் கட்சியின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது எனக் கூறியுள்ளார். நடந்த தேர்தலில் சுமார் 21% ஆதரவைப் பெற்று இரண்டாவது பெரிய கட்சியாக இக் கட்சியுள்ளது.








## முற்போக்கு சீர்திருத்தக் கட்சி.(Frp)

முற்போக்கு சீர் திருத்தக் கட்சியைப் பொறுத்தவரை தற்போதுள்ள நிலவரம் இறங்கு முகமாகவே உள்ளது . 85க்குப் பின் அசுர வளர்ச்சியடைந்த இக் கட்சி 90களிலிருந்து வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. 1989 பொதுத் தேர்தலில் சுமார் 13% செல்வாக்கைப் பெற்றிருந்த இக் கட்சி தற்போது 7,4% ஆதரவைப் பெற்றுள்ளது. கட்சியின் இன/ நிறவெறிக் கொள்கைகள் மக்கள் மத்தியில் எடுபடாமல் போனதும் கட்சித் தலைவர் கார்ள் இ ஹாகனின் பொறுப்பற்ற பேச்சுக்களும் (உ+ம் ∴பின்மார்க் மாவட்டம் தொடர்பான உரையும் சமூக உதவிக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் அவற்றைப் பெறுபவர்கள் தொடர்பான கருத்தும்) கட்சியின் உள் நாட்டு வெளிநாட்டு அரசியல் கொள்கைகளும் கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியுறக் காரணங்களாகும்.

## சோசலிஸக் இடது சாரிக் கட்சி

நடைபெற்று முடிந்த தேர்தலில் பாரிய முன்னெடுப்பை எடுத்துள்ள இரு கட்சிகளில் சோசலிஸ இடதுசாரிக் கட்சியும் ஒன்றாகும். 1987 தேர்தலில் சுமார் 5,7% மட்டுமே பெற்றிருந்த இக் கட்சி இன்று தனது செல்வாக்கை சுமார் 130% ஆல் அதிகரித்து சுமார் 12,5% செல்வாக்கை பெற்றுள்ளது . சூழல் மாசடைதல், சோசலிஸ ஜனநாயகம், சமூக நல உதவித் திட்டங்களை அதிகரித்தல், நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள வேலையில்லா திண்டாட்டத்திற்குப் படிப்படியான தீர்வு போன்றன கட்சியின் பிரசாரமாக இருந்து வருகின்றன. தமது கட்சியின் தேர்தல் வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட கட்சித் தலைவர் எரிக் சுல்ஹெய்ம் தேர்தல் முடிவுகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிராக மக்கள் அணி திரண்டு வருவதையே குறிக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். அயல் நாடான ரஷ்யாவில் அடுத்தடுத்து ஏற்பட்ட மாற்றங்களுக்கு மத்தியிலும் பத்திரிகை உட்பட தொடர்பு சாதனங்கள் பலவும் சோசலிஸத்திற்கும், கம்யூனிஸத்திற்கும் எதிராக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள இன்றைய நிலையில் சோசலிஸ இடது சாரிக்கட்சியின் இப் பாரிய முன்னெடுப்பானது இங்கு சோர்ந்து போயிருந்த இடதுசாரிகளுக்கும், முற்போக்குக் கொள்கையாளருக்கும் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது. தொடரும் வருடங்களில் இக் கட்சி முன்னணிக்கு வந்துவிடும் என்பதை பாடசாலைகளில் மாணவ மாணவியர் மத்தியல் நடாத்திய வாக்களிப்பு தெளிவு படுத்துகிறது. வெளிநாட்டவர் தொடர்பாக நெகிழ்ச்சியான போக்கைக் கடைப் பிடிக்கும் இக் கட்சியின் முன்னெடுப்பு நிறவாதிகள் மத்தியில் சிறு சலசலப்பை உருவாக்கியுள்ளது.

## மத்தியகட்சி (SP)

பத்திரிகைகளின் கணிப்பீட்டையெல்லாம் முறியடித்து வெற்றியடைந்துள்ள இக்கட்சி தனது தேர்தல் கோசங்களில் முன்னிலைப்படுத்திய விடயம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிராக மக்களை அணி திரளும்படி கூறியமையே. கட்சியின் தலைமைப் பதவிப் பொறுப்பை இவ் வருட ஆரம்பத்தில் ஏற்ற கட்சித் தலைவி அன்னை எங்கர் தொழிற் கட்சிக்கும் வலதுசாரிக் கட்சிக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிராக நாடு தழுவிய ரீதியல் மேற்கொண்ட பிரசாரம் கட்சியை முன்னிலைப் படுத்தியுள்ளது. 1987இல் சுமார் 6,8% செல்வாக்கைக் கொண்டிருந்த கட்சி தற்போது 12,5% செல்வாக்கைப் பெற்று ஏனைய கட்சிகளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் வட பிராந்தியத்திலும் மத்திய பிராந்தியத்திலும் பாரிய வெற்றியை இக் கட்சி பெற்றுள்ளது. எதிர்வரும் காலங்களில் தொழிற் கட்சியானது ஐரோப்பிய கொள்கையை மீளாய்வு செய்யத் தவறும் பட்சத்தில் மத்திய கட்சியின் முன்னெடுப்பை தடுத்து நிறுத்த இயலாது.

## கிறிஸ்தவ மக்கள் கட்சி (Krf)

இக் கட்சியைப் பொறுத்தவரை இத் தேர்தல் வெற்றி தோல்வியின்றியே உள்ளது. 1987இல் 8,1% ஆதரவைப் பெற்றிருந்த இக் கட்சி தற்போது 8,2% ஆதரவைப் பெற்றுள்ளது. அண்மைக்காலமாக மத்திய கட்சியுடனும், சோசலிஸ இடதுசாரிக் கட்சியுடனும் நெகிழ்ச்சியான உறவை ஏற்படுத்தி ஐரோப்பிய ஒன்றியம், அய்ரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு போன்றவை தொடர்பாக பொது மக்களிடம் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகிறது.





மேற் கூறிய கட்சிகள் மட்டுமின்றி தீவிர இடதுசாரிப் போக்கைக் கொண்ட RV (Rodvalgaliansc) வலதுசாரிக் கட்சியான V (Venstrc) மற்றும் ஒய்வூதியம் பெறுபவர்களின் கட்சி என்பனவும் தத்தமது செல்வாக்குகளை மிகக் குறைந்தளவில் அதிகரித்துள்ளன.

## ஒஸ்லோ நிலவரம்

கடந்த பதினாறு வருடங்களிற்குப் பிறகு தற்போதுதான் முதற் தடவையாக தலைநகரில் சோசலிஸ, இடதுசாரி கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் பதவியேற்றுள்ளன. முன்பைவிட ஒரிடத்தை தொழிற்கட்சி இழந்துள்ள போதும் சோசலிஸ இடதுசாரிக் கட்சியுடன் இணைந்து அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து அறிக்கை வெளியிட்டுள்ள மாவட்ட மாநகர சபை நிர்வாகப் பிரிவினர் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை குறைத்தும் முக்கிய அடிப்படைப் பொருளாதார பிரச்சனைகளைத் தீர்க்கும் நோக்குடனும் தாங்கள் செயல்படப் போவதாகக் கூறியுள்ளதுடன் தலைநகரில் சூழல் மாசடைந்து வருவதைத் தடுக்கும் விதத்தில் எதிர்காலத் திட்டங்கள் அமையும் எனவும் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட சகலருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனவும் இவ் வேலைகளை செய்ய மறுப்பவர்கள் சகல வகையான சமூக கொடுப்பனவுகளையும் இழப்பர் எனக் கூறியுள்ளனர்.

## பிரதமர் குறூஹாலம் புருண்ட்லாந்தின் நிலை

நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் தொழிற்கட்சிக்கும் எதிராக மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பு என பலதரப்பட்ட பத்திரிகைகளும் கூறியுள்ளன. இத் தேர்தல் தனிப்பட்ட முறையில் தொழிற்கட்சித் தலைவியும் பிரதமருமான குறூஹாலம் புருண்லாந்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவரின் நிச்சயமற்ற ஐரோப்பிய கொள்கை காரணமாக கட்சிக்குள் நெருக்கடி வலுத்து வருகிறது. கட்சியின் ஐரோப்பியக் கொள்கையை தீவிரமாக எதிர்த்துவரும் கட்சியின் அங்கத்தவர்களான இங்வ ஸ்ராஸ்டிவிக் மற்றும் அஷ்லக் வெஸ்ரோ ஆகியோர் இவ் விடயங்கள் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு அவசியம் எனக் கூறி கட்சிக்குள் தமது நிலைப்பாட்டினை விஸ்தரித்து வருகின்றனர். கடந்த ஆறு வருட கால இடைவெளியில் நடைபெற்ற தேர்தல்களைக் கருத்திற் கொள்ளும் போது இனிமேல் ஒரு தேர்தல் வெற்றியை பிரதமர் அடைய முடியுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. 1985 பாராளுமன்ற தேர்தலில் 40,8% யும் பின் 1987 பாராளுமன்றத் தேர்தலில் 35,9% யும் பின் 1989 பாராளுமன்றத் தேர்தலில் 34,3% யும் பின் தற்போது நடந்த தேர்தலில் 30,8% பெற்று தொடர்ந்து இறங்கு முகமாகவே தொழிற்கட்சி சென்று கொண்டுள்ளது. தற்போது நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து, பிரதமர் தொடர்ந்து பதவியில் இருப்பது நியாயமா என்ற கேள்வியை சில பத்திரிகைகள் எழுப்பியுள்ளன எனினும் அரசியல் கட்சிகள் மத்தியில் நிலவும் சித்தாந்த வேறுபாடுகளால் வலதுசாரிக் கூட்டு முன்னணி அரசாங்கம் ஏற்பட வழியில்லை என்பதும் தெளிவாகும். முதலாளித்துவ கட்சிகளின் கூட்டமைப்பிற்குள் மத்திய கட்சி வருகின்ற போதும் பிரதான எதிர்க்கட்சியான வலது சாரிக் கட்சி பல விடயங்களில் முரண்படுகிறது.

தேர்தலில் சோசலிஸ இடதுசாரிக் கட்சியின் முன்னெடுப்பைத் தொடர்ந்து நாட்டில் பெரும்பாலான இடங்களில் "சிவப்பு நிறக் கொடி" பறப்பதாக பத்திரிகைகள் கூறியுள்ளன. (பல இடங்களில் சோசலிஸ இடது சாரிக் கட்சியும் தொழிற் கட்சியும் கூட்டாக இயங்குகின்றன) தேர்தல் முடிவுகள் பற்றி அலசி ஆராய்ந்த ஆய்வாளர்கள் நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பெற்றுள்ள வாக்கு வீதத்தையும் மொத்தமாக நாடு முழுவதும் பெற்றுள்ள வாக்கு வீதத்துடன் ஒப்பிடுகையில் நகர்ப்புற மக்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் இடையில் பொதுவான விடயங்களில் பாரிய இடைவெளி நிலவுவதாகவும் நகர்ப்புறங்களில் கூட பிராந்தியத்திற்குப் பிராந்தியம் பெருமளவு இடைவெளி இருப்பதாகவும் கூறுகின்றனர்.

மேற் கூறப்பட்ட நிலைமை கடந்த 4 தசாப்தங்களாக தொடர்ந்து நிலவுகிறது. இந்நாட்டின் பொருளாதார அமைப்பும் கோட்பாடுகளும் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகக் கொள்கைகளும் தூய முதலாளித்துவத்திற்கு வழி வகுக்காத போதும் மேற் கூறப்பட்ட இடைவெளி தொடர்ந்து நிலவுவதாகவும் முக்கியமான பொது விடயங்களில் நாட்டு மக்கள் பிளவுபட்டு நிற்பதாகவும் கூறப்படுகிறது.

இம் முறை நடை பெற்ற தேர்தலில் பெருமளவு வெளிநாட்டவர்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். 'புகலிடம் தேடி' வந்த எம்மில் எத்தனை பேர் எமது கடமையை சரிவர செய்தோம் ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வேள்விகள்

எங்களைத் தனிமையாகக்
கட்டினார்கள்
அழகான உணவு ஊட்டினார்கள்
காலை மாலை எங்களை
வந்து வந்து பார்ப்பார்கள்
புதிய புதிய உணவுகள்
எல்லாம் எம்முன் குவிந்தன.

வருவோரும் போவோரும்
எமக்கெல்லாம் மரியாதை
செய்தனர்.
நாமோ மகிழ்ச்சிப்
பிரவாகத்தால் திளைத்து
மனம் நெகிழ்ந்து போனோம்.

அனேகமான மக்கள் எங்களைத்
தடவுவார்கள்
தங்கள் மீது எங்களை அணைத்துக்
கொள்வார்கள்—

வாழ்க்கையே எங்களுக்கு
வாழ்க்கையாகத் தெரியவில்லை.
எங்கள் உள்ளங்களிலே
கவலை என்பதே இருக்கவில்லை.
சிலபேர் வந்தார்கள்,
சிலபேர் போனார்கள்.

இப்படித்தான்
ஒருநாள்-
பூணூல் போட்டு சிலபேர்
எம்மைப் பார்க்க வந்தார்கள்.
எம்மைப் பார்த்துப் புளகாங்கிதம்
அடைந்தார்கள்.
நாமும் புளகாங்கிதம் அடைந்தோம்.

அனைத்தும் முடிந்து
சிலபேர் பேசிக்கொண்டார்கள்-
இன்று 'ஐயன் கோயில் பொங்கல்'
காலையிலே வந்தார்கள்-
எங்களுக்கு குளிப்பாட்டி மாலை போட்டார்கள்,
பொட்டு வைத்தார்கள்
அழகுபடுத்தினார்கள்
வாருங்கள் என்று அழைத்துப் போனார்கள்.
ஊர்வலம்- எங்களுக்கு ஊர்வலம்.
நாமெல்லாம் மகிழ்ந்தோம்
எங்களுக்கு விருந்து.....
கொண்டுபோய் 'ஐயன் கோயில்' வளவில்
கட்டினார்கள் - எங்களோடு
இன்னும் சிலவைகளையும்.
புரியவில்லை புதிராய் விளித்தோம்
எல்லாம் முடிந்தது - 'பொங்கி முடிந்தது'
காலை வந்தது.....
ஐயகோ! கத்தியும் வந்தது—
பெரிய கத்தி ஒரே ஓங்கில்
தலை உருண்டுவிடும்—
இதற்குத் தானா இவ்வளவும்—
ஓ... என்று கத்த நினைத்தோம்—
மனிதனை நினைத்துச் சும்மா
இருந்துவிட்டோம்.
பூ, பொட்டு, உணவு, ஊர்வலம் எல்லாம்
இதற்குத் தானா?
பார்த்திருக்கக் கழுத்தறுக்கும்
மனிதனை— எண்ணி—
வேண்டாம்,
சொல்லிப் பயனில்லை.
இப்போது
மாளப்போகும் வேள்விக் கடாய்கள் நாம்.

●

இளைய அப்துல்லா

●

அக்குறணை
இலங்கை

'SUVDUHAL* A Tamil monthly from Norway, August - September 1991



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்